பக்கங்கள்: பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 18 திங்கட்கிழமை (03-09-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:281

# நாடாளுமன்றம் வியாழக்கிழமை கூடும்;

# சர்வஜன வாக்கெடுப்பு கைவிடப்பட்டது!

இனப்பாகுபாட்டுக்கு எதிரான சர்வதேச மாநாடு நடைபெறும் தென்னாபிரிக்காவின் டேபன் நகரில் மாநாட்டு மண்டபத்துக்கு வெளியே நூற்றுக்கணக்கான தமிழர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தென்னாபிரிக்க தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஈழத் தமிழர்களின் இனப் படுகொலைக்கு எதிராகக் குரல்கள் எழுப்பப்பட்டன.

ஆர்ப்பாட்டத்தில் பங்கு பற்றிய ஒரு தந்தையும் மகனும் சுலோக அட்டையைத் தாங்கியவாறு காணப்படுகின்றனர்.




*(படம்:ஏ.எப்.பி.)*

## நேற்று நள்ளிரவு அரசு அறிவிப்பு

கொழும்பு,செப்ரெம்பர்3

**ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை எதிர்வரும் 6 ஆம் திகதி வியாழக்கிழமை மீண்டும் கூட்டவும் -**

**புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு மக்களின் ஆணையைப் பெற்றுக்கொள்வதற்காக அடுத்த மாதம் 18 ஆம் திகதி நடத்தப்பட இருந்த சர்வஜன வாக்கெடுப்பை ரத்துச் செய்யவும் -**

**அரசு முடிவு செய்திருக்கிறது.**

**இவை தொடர்பாக ஜனாதிபதியின் பிரகடன அறிவிப்பு நேற்று நள்ளிரவு வர்த்தமானி மூலம் வெளியிடப்பட இருந்தது.**

தற்போதைய அரசியல் நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக ஜே.வி.பியின் நிபந்தனைகளை ஏற்று அதன் ஆதரவோடு அடுத்த ஒரு வருட காலத்துக்கு 'தகுதிகாண்' அரசாக ஆட்சியில் நீடிப்பதற்குப் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி முடிவு செய்திருந்தது தெரிந்ததே. அதன்படி இணக்கம் காணப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பான அறிவிப்புக்களை வெளியிட நேற்று நள்ளிரவு வரை அரசுக்கு ஜே.வி.பி. அவகாசம் வழங்கி இருந்தது.

ஜே.வி.பியுடனான பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் தொடர்பாக நேற்று முன்னிரவில் நடைபெற்ற பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

ஜே.வி.பியின் நிபந்தனைகளை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டுக்காக 'எந்தப் பிசாசுடனும்' சேர்ந்து பணியாற்றத் தயார்!

### ஜே.வி.பியுடனான கூட்டு குறித்து ஜனாதிபதி

கொழும்பு,செப்.3

நாட்டு நலனுக்காக எந்தப் பிசாசுடனும் சேர்ந்து பணிபுரியத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருக்கிறார்.

நேற்று மாலை திம்பிரிகஸ்யாயவில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொன்விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் அரசமைப்பை தனது உரையில் பெரிதும் பாராட்டிப் பேசிய ஜனாதிபதி, அந்த அரசமைப்பின்படியே கடந்த 7 ஆண்டுகள் ஆட்சியில் தொடர்வதாகக் கூறினார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வே காணப்படவேண்டும். அது சாத்தியப்படாவிட்டால் மாற்றீடாக யுத்தம் மூலம் தீர்வு காணலாம். யுத்தத்தைத் தொடரவேண்டுமானால் சகலரும் இராணுவத்தில் இணையவேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அங்கு கூடியிருந்த சுமார் ஒரு லட்சத்து 65ஆயிரம் பேரிடமும் யுத்தத்தில் ஈடுபட முன்வருவீர்களா என்று

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தற்போதைய அமைச்சரவை கலைக்கப்படும்

## 20 பேர் கொண்ட புதிய அமைச்சரவை விரைவில்!

ஜே.வி.பியின் ஆதரவுடன் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அமைக்கவிருக்கும் தகுதிகாண் அரசின் 20 அமைச்சர்கள் கொண்ட புதிய அமைச்சரவை விரைவில் பதவியேற்கவிருக்கின்றது.

44 அமைச்சர்களைக் கொண்ட தற்போதைய அமைச்சரவை கலைக்கப்பட்டு புதிய அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவை அமைக்கப்படும்.

இந்த அமைச்சரவையில் இடம் பெறப்போகும் புதிய அமைச்சர்கள் யார் என்பது குறித்து அமைச்சர்கள் மட்டத்தில் தீவிர எதிர்பார்ப்புக் காணப்படுகிறது.

அரசுக்குள் அதிருப்திக் குழுவாக இயங்கும் சிரேஷ்ட அமைச்சர்களான எஸ்.பி.திஸநாயக்கா, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், மஹிந்த விஜேசேகரா, ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே ஆகியோருக்கு புதிய அமைச்சரவையில் இடமளிக்கப்படமாட்டாது என்றும் -

அடுத்துவரும் தேர்தல்களில் கூட இவர்களுக்கு வேட்பாளர் நியமனம் வழங்கப்படமாட்டாது என்றும் -

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும்போது, பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் சிறுபான்மைக் கட்சிகள் அமைச்சர் பதவிகளை இழக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று இணையத்தளம் ஒன்று தெரிவித்தது. (ஐ-3)

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின்

## பொன் விழா நிகழ்ச்சிகளை 4 அமைச்சர்கள் பகிஷ்கரிப்பு!

கொழும்பு,செப்.3

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்குள் அதிருப்திக் குழுவாக இயங்கும் நான்கு முக்கிய அமைச்சர்கள் நேற்று நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொன் விழாக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்ளாமல் அதனைப் பகிஷ்கரித்தனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரான எஸ்.பி.திஸநாயக்கா, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த பொன் விழாக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

அவரது தலைமையிலான அதிருப்திக் குழுவில் இடம்பெறும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், மஹிந்த விஜேசேகரா, அநுருத்த ரத்வத்தே ... [illegible] நந்தமித்ர ஏக்கநாயக்கா மற்றும் பிரதி அமைச்சர் டலஸ் அழகப்பெருமா உட்பட இவர்களின் ஆதரவாளர்களும் நேற்றைய நிகழச்சிகளில் பங்குபற்றவில்லை என்று இணையத்தளச் செய்திகள் தெரிவித்தன.

கொழும்பு ஹவலக் ரவுனில் உள்ள ஹென்றி பீரிஸ் பூங்காவில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொன் விழாக் கொண்டாட்டங்கள் நடைபெற்றன.

அரசுக்குள் அதிருப்திக் குழுவாகச் செயற்படும் எம்.பிக்கள் மீது, இந்தப் பொன் விழா மாநாட்டு நிகழ்வுகளில் வைத்தே ஒழுங்குநடவடிக்கை எடுக்கப்படலாம் என்று முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே.

## முகமாலையில் மோதல்

யாழ்ப்பாணம்,செப்.3

முகமாலை மற்றும் கிளாலிப் பகுதிகளில் நேற்றுக் காலை பலத்த ஷெல் சத்தங்களும் பல்குழல் எறிகணை ஓசைகளும் கேட்டன.

வலிகாமத்தில் உள்ள படை நிலைகளில் இருந்து இந்தப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

முகமாலைப் பகுதியில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மோதல் இடம் பெற்றதாகத் தெரியவருகிறது. (ஐ)

## 40 இலங்கையர் பிரிட்டனில் கைது!

லண்டன்,செப்.3

ஜேர்மனியில் இருந்து லொறி ஒன்றில் பிரிட்டனுக்குள் நுழைய முயன்ற 40 இலங்கையர்கள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

தளபாடங்கள் ஏற்றிச் செல்லப்பட்ட லொறிக்குள் பதுங்கியிருந்த இவர்கள் கைது செய்யப்பட்டனர். எட்டுவயதுக் குழந்தை ஒன்றும் அவர்களில் அடங்கும்.

இவர்களில் மயக்கமுற்ற நிலையில் காணப்பட்ட ஒருவருக்குப் பின்னர் சிகிச்சை அளிக்கப்பட்டது. (ஐ-3-9)

## நாட்டின் மேற்குக் கரையில் நேற்று சிறிய நில அதிர்வுகள்

கொழும்பு,செப்.3

இலங்கையின் மேற்குக் கரைப் பகுதிகளில் நேற்றுக்காலை சிறிய அளவிலான நில அதிர்வுகள் ஏற்பட்டிருக்கின்றன.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் ஆரம்பித்த இந்த நில அதிர்வு சுமார் 20 விநாடிகள் நீடித்தது. ரிச்டர் அளவுகோலில் 3 புள்ளியாகப் பதிவாகியது.

நாட்டின் மேற்குக்கரையோரப் பகுதிகளான மொறட்டுவ, பாணந்துறை மற்றும் களுத்துறைப் பகுதிகளிலேயே நில அதிர்வு ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. எனினும் கொள்ளுப்பிட்டி மற்றும் பாதுக்கை பகுதிகளிலும் நில அதிர்வு உணரப்பட்டதாக அப்பகுதி வாசிகள் தெரிவித்திருக்கின்றனர்.

இலங்கையை அடுத்துள்ள மேற்குக்கடலில் சமுத்திரப் படுக்கையில் ஏற்பட்ட குழப்பங்களே இந்த நில அதிர்வுக்குக் காரணமாக இருக்கலாம் என்று புவியியல் ஆய்வு மற்றும் கனிமவள நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் விஜயேந்திரா தெரிவித்தார்.

நேற்றைய நில அதிர்வினால் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை. (ஐ-9)

## கட்டுமரத்தில் குண்டு வெடித்ததை அடுத்து

## பருத்தித்துறையில் கைதான மீனவரில் 26 பேர் விடுவிப்பு

வடமராட்சி,செப்.3

பருத்தித்துறை கடற்பகுதியில் நேற்றுமுன்தினம் கட்டுமரத்தில் இடம் பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்துக் கைது செய்யப்பட்டவர்களில் 26 பேர் நேற்று மாலை விடுவிக்கப்பட்டனர்.

கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த சமயம் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு கரைக்கு கூட்டிவரப்பட்டவர்களில் 42 பேர் பின்னர் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் 40 வயதுக்கு மேற்பட்டவர்களான 26 பேர் நேற்று மாலை

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# அம்பாறை 'சென்ரல் காம்ப்' பகுதியில் செவ்வாய் இரவு ஏற்பட்ட களேபரம்!

கொழும்பு,செப்.3

தவறான ஊகங்களின் அடிப்படையில் புலிகள் தாக்குவதாக எண்ணிக்கொண்ட பொலீஸாரும் படையினரும் பீதியடைந்து பெருத்த எடுபபில் பதில் தாக்குதல்களை மேற்கொண்டதால் அம்பாறை 'சென்ரல் காம்ப்' பொலீஸ் நிலையப் பகுதியில் கடந்த செவ்வாய் இரவு பெரும் களேபரம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பான விவரங்களை 'சண்டே ரைம்ஸி'ன் பாதுகாப்பு ஆய்வாளர் இக்பால் அத்தாஸ தனது 'கள நிலைவரம்' தொடர்பான வாராந்தப் பத்தியில் வெளியிட்டிருக்கிறார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அம்பாறைக்கு வடக்கே முப்பது கிலோ மீற்றர் தொலைவில் உள்ள 'சென்ரல் காம்ப்' பொலீஸ் நிலையத்தைச் சூழ நிலவிய அசாதாரண அமைதி கடந்த செவ்வாய் இரவு. துப்பாக்கிச் சூடுகளினால் குழம்பியது. அந்தப் பிரதேசத்தில் காவலுக்கு இருந்த பொலீஸார் தமக்கு அப்பால் உள்ள நிலைகளை நோக்கி விடாது குண்டுமாரி பொழிந்தனர். மற்றொரு தாக்குதலை புலிகள் கெரில்லாக்கள் ஆரம்பித்து விட்டதாக அவர்கள் நினைத்தனர்.

அந்த இரவு நேரம் 'சென்டரல் காம்ப்' முகாமை நோக்கி மோட்டார் மற்றும் சிறியரக ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடத்தப்படுவதாகக் கிடைத்த தகவல்கள் பீதியை ஏற்படுத்தின.

இதற்கு சரியாக ஏழு நாள்களுக்கு, முன்னர்தான் கெரில்லாக்கள 'சென்ரல் காம்ப்' பொலீஸ் நிலையத்தைக் கைப்பற்றி அங்கு ஆயுதக் களஞ்சியத்திலிருந்தவை உட்பட ஆயுதங்கள் அனைத்தையும் எடுத்துச் சென்றிருந்தனர்.

பொலீஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்கு ஜனாதிபதி மாளிகையில் இருந்தபோதுதான் 'சென்ரல் காம்ப்' மீது மற்றொரு தாக்குதல் நடத்தப்படுவது குறித்து அவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

சில உத்தியோகபூர்வ விடயங்கள் சம்பந்தமாக ஜனாதிபதியுடனும் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சந்திரானந்தா டி சில்வாவுடனும் அவவேளை உரையாடிக் கொண்டிருந்த அவர் உடனடியாக அதுகுறித்து அவர்கள் இருவருக்கும் தெரியப்படுத்தினார்.

அதையடுத்து கவனம் 'சென்ரல் காம்'பின் பக்கம் திரும்பியது.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சந்திரானந்த டி சில்வா தொலைபேசி மூலம் கட்டளைகளைப் பிறப்பிக்கத் தொடங்கினார்.

இராணுவத் துருப்புக்களை அந்தப் பிரதேசத்துக்கு விரைந்து அனுப்பும்படி இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் பலகல்லவுக்கு உத்தரவு பறந்தது. அவர் ஹெலிக்கொப்டர் ஒன்றை ஏற்பாடு செய்வதற்காக விமானப் படைத் தளபதி ஏயர் மார்ஷல் ஜெயலத் வீரக்கொடியுடன் தொடர்புகொண்டார்.

மீளப் பயிற்சிகளில் ஈடுபட்டிருந்த சிப்பாய்களில் ஒரு தொகுதியினரான - ஒரு 'பிளட்டூன்' துருப்புக்கள் ஹிங்குராகொடவிலிருந்து வான்வழியாக 'சென்ரல் காம்ப்' பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டன.

கெரில்லாக்கள் தரையிலிருந்து வானுக்குச் செலுத்தும் ஏவுகணைகளை பெருமளவில் கைவசம் கொண்டிருக்கும் இப்போதைய நிலையில், அந்த இரவில் ஹெலிக்கொப்டர் மூலம் துருப்புக்களை இடம்மாற்றுவது மிக ஆபத்தானது என்பதைக் குறிப்பிட்டுக் கூறத் தேவையில்லை.

அதேசமயம் -

பொலீஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் ஆகியோரின் பொறுப்பில் பாதுகாப்பு ஒப்படைக்கப்பட்ட அந்தப் பிரதேசத்துக்கு -

மீள் பயிற்சிகளில் ஈடுபட்டிருந்த மேலும் இரு 'பிளட்டூன்' படையினர், தமது பயிற்சிகளை இடைநிறுத்தி, தரை வழியாக நள்ளிரவு நேரத்தில் விரையும்படி பணிக்கப்பட்டனர்.

ஜனாதிபதி செயலகத்திலிருந்து நெருக்கடி கால ஏற்பாடுகள் தொடர்பான பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அதிக நேரம் சென்ற பின்னரே பொலீஸ் மா அதிபர் கொடித்துவக்குக்கு மேலும் புதிய செய்திகள் கிடைத்தன.

எச்சரிக்கை அடைவதற்கு அங்கு ஒரு காரணமும் இருக்கவில்லை. 'சென்ரல் காம்ப்' மீது தாக்குதல் ஏதும் நடத்தப்படவேயில்லை. அந்த இடத்தில் உள்ள விசேட அதிரடிப் படையினரால் அந்தப் படையின் கட்டளை அதிகாரியான பிரதிப் பொலீஸ் மா அதிபர் நிமால் குணதிலக மூலம் இது உறுதிப்படுத்தப்பட்டது.

அந்தப் பிரதேசத்தில் கடமையிலீடுபடுத்தப்பட்ட பொலீஸார் பீதியால் சுட்டதுதான் நடந்துள்ளது.

மரக்கிளைகளின் நிழல்கள் அசைந்ததை அவர்கள் கண்டார்களா? அல்லது கட்டாக்காலி நாய்கள்தான் குழப்பத்தை ஏற்படுத்தினவா? காரணம் என்னவென்பது எப்போதுமே தெரியாமல் போகலாம். ஆனால் அங்கு புலிகள் கெரில்லாக்களின் தாக்குதல் ஏதும் நடக்கவில்லை என்பது மட்டும் தெட்டத்தெளிவு.

புலிகள் தாக்குதல் நடத்தவில்லை என்ற தகவலை பொலீஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்கு ஜனாதிபதிக்கும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வாவுக்கும் பின்னர் தெரியப்படுத்தினார். எனினும் பாதுகாப்புக்காக அங்கு அனுப்பப்பட்ட மூன்று 'பிளட்டூன்' துருப்புக்களையும் தொடர்ந்து அங்கேயே நிலைகொள்ள வைப்பது என்று அப்போது தீர்மானிக்கப்பட்டது.

நான்கு தினங்களின் பின்னர் அந்தத் துருப்புக்களில் ஒருபகுதியினர் அங்கிருந்து திருப்பியழைக்கப்பட்டு அவர்களின் மீள் பயிற்சிக்கு அனுப்பப்பட்டனர். ஏனையோர் தொடர்ந்து 'சென்ரல் காம்பின்' பாதுகாப்புக்காக அங்கேயே தங்கவைக்கப்பட்டனர்.

புலிகளின் பெரும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் உள்ள குறைபாடுகளை செவ்வாய் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் உணர்த்துகிறது - என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை -

'வெலி ஓயா' பகுதியில் பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தப் புலிகள் திட்டமிட்டிருப்பதாகக் கிடைத்த மற்றொரு தகவலை அடுத்து கடந்த வாரம் பாதுகாப்பு ஏற்பாடுகள் அங்கு பலப்படுத்தப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

தகவல் கிடைத்ததும் புலனாய்வாளர்களும், படை அதிகாரிகளும் விரைந்து செயற்பட்டு மேலதிக துருப்புக்களைக் கொண்டு அவசர பாதுகாப்பு முன்னேற்பாடுகளைச் செய்தனர்.

ஆனால் அந்தத் தகவல் பாதுகாப்பு அமைச்சில் கடமையாற்றும் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஒருவரால் வழங்கப்பட்டது என்பதும் -

இதுபோன்று அவர் முன்னரும் பல தடவைகள் வழங்கிய தகவல்கள் தவறானவை என்பதும் -

கடைசியில் தெரியவந்தது.

(ஐ-உ)

# தகுதிகாண் அரசு அமைப்பது நாட்டுக்குப் பெரும் ஆபத்து

## ஐ.தே.கட்சி தெரிவிப்பு

கொழும்பு,செப்3

தகுதிகாண் அரசு அமைப்பது தொடர்பாக அரசுக்கும் ஜே.வி.பிக்கும் இடையே காணப்பட்டுள்ள இணக்கப்பாடு நாட்டுக்குப் பெரும் பாதகமாக அமையலாம்.

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே. கட்சி இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு இது தொடர்பாகத் தெரிவித்திருப்பதாவது:-

இந்த இணக்கப்பாடு காரணமாக அரசுத் தரப்பும், ஜே.வி.பியும்தான் நன்மை ஒன்றை அடையமுடியுமே தவிர - நாட்டுக்கு எத்தகைய நன்மையும் ஏற்படப் போவதில்லை.

நாட்டு மக்கள் ஆட்சி மாற்றத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அரசுக்கு முண்டுகொடுக்க ஜே.வி.பி. முன்வந்திருப்பது கவலைக்குரியது. இரு தரப்பு இணக்கப்பாடு காரணமாக நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படுவதோடு, இனப்பிரச்சினை விவகாரம் மேலும் மோசமடையக்கூடிய சூழ்நிலை உருவாகலாம். - என்றும் தெரிவித்தார்.

(ஐ-9)




இலங்கை வங்கியின் 62 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையில் வெளிநாட்டுக் கணக்குப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப வைபவத்தில் முகாமையாளர் தேவராஜா தலைமையுரை ஆற்றுவதை படத்தில் காணலாம்.

யாழ்.மாவட்ட முகாமையாளர் பீ.த. அருமைநாயகம் பருத்தித்துறை கிளை உதவி முகாமையாளர் சிவநாதன் ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர். *(படம்:- வடமராட்சி செய்தியாளர்)*

# பஸ் விபத்தில் கோப்ரல் பலி!

கொழும்பு,செப்.3

கண்டியில் இருந்து ஹிங்குரான்கெத்த பகுதிக்குச் சென்று கொண்டிருந்த பயணிகள் பஸ் ஒன்று தலத்து ஓயா பகுதியில் நேற்று வீதியை விட்டு விலகி 200 அடி பள்ளத்தில் வீழ்ந்ததில் மூவர் உயிரிழந்தனர். 35 பேர் காயமடைந்தனர்.

பலியானோரில் ஒருவர் இராணுவக் கோப்ரல் ஏ.என். ஜெயசூரிய என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

# ஜனாக பெரேரா வரவிருந்த நிகழ்ச்சி ரத்து

சிட்னி,செப்.3

ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதர் மேஜர் ஜெனரல் ஜனாக பெரேரா நேற்று மெல்போர்ண் நகரில் பங்குபற்ற இருந்த விழா ஒன்று அங்குள்ள தமிழ் மக்களின் கடும் எதிர்ப்பை அடுத்துக் கைவிடப்பட்டது.

'ஸ்ரார்' எனப்படும் பௌத்த சிங்கள அமைப்பின் ஏற்பாட்டில் அந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் பிரமாண்டமான முறையில் செய்யப்பட்டிருந்தன.

விழா நடைபெறவிருந்த கிளேற்றன் மண்டபத்துக்கு வெளியே அமைதியான முறையில் திரண்ட ஆறுநூறுக்கும் மேற்பட்ட தமிழர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் அந்த விழா இறுதி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டது.

(ஐ-9)

# 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலின் கட்டணத்தைக் கூட்டவேண்டாம்!

யாழ்ப்பாணம்,செப்.3

திருகோணமலைக்கும் காங்கேசனதுறைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலுக்கான பயணக்கட்டணம் அதிகரிகப்படக் கூடாது.

மேற்கண்டவாறு செஞ்சிலுவைச் சங்கத் குழு அதிகாரிகளிடம் ஐ.தே. கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் கேட்டுக் கொண்டார்.

குறைந்த கட்டணத்தில் சேவையை நடத்தப் பல கப்பல் நிறுவனங்கள் தயாராக இருக்கின்றன என்றும் -

அத்தகைய நிறுவனங்களுடன் பேச்சு நடத்தி அவற்றுக்கு வழித்துணை வழங்கி குறைந்த கட்டணத்தில் மக்கள் பயணத்தை மேற்கொள்ள உதவ வேண்டும் என்றும் -

மகேஸ்வரன் கேட்டுக்கொண்டார்.

# வாசகர் திருமுகம்

## தமிழருக்கு அவசியம் தேவை ஓர் ஆங்கில நாளிதழ்

இன்றுள்ள போராட்டச் சூழலில் நம் மக்கள் எத்தகைய பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என இங்கு விளக்கிக் கூறத் தேவையில்லை. இந்த அவல நிலைக்கு அடிப்படைக் காரணமாயுள்ள இனச் சிக்கல் மிகவிரைவில் தீர்க்கப்படுதல் வேண்டுமென்பது பற்றி இரு வேறு கருத்துக்களுக்கு இடமேயில்லை.

சிங்கள ஆட்சியாளர் நெறிப்படச் சிந்திக்க முற்படாதவரை, இச்சிக்கலின் பின்னணியை நன்கறிந்த, ஆற்றல் மிக்க, வலிய நடுவரின் துணையின்றி உரையாடல் மூலம் இருபாலாரும் ஏற்கக் கூடிய ஒரு தீர்வை எட்டுதல் இயலாது.

இந்நிலையில் இங்கு வாழும் தமிழ்மக்களின் உண்மை நிலையை - அவர்களுடைய கோரிக்கையில் அடங்கியுள்ள நியாயத்தை - இந்நாட்டு மக்களுக்கும் வெளி உலகுக்கும் இடையறாது எடுத்தோதத் தக்கவாறு வடிவமைக்கப்பட்ட ஓர் ஆங்கிலச் செய்தி இதழ் விரைவில் வெளியிடப்படுதல் வேண்டும்.

தொடக்கத்தில் அதனை ஒரு வார இதழாக வெளியிடலாம். மக்களின் ஆதரவைக் கட்டி எழுப்பி நாளடைவில் அதனை நாளிதழாக மாற்றலாம்.

சென்ற காலத்தில் ச.சிவநாயகம் அவர்களின் கைவண்ணத்தில் "சற்றடே றிவ்யு" என்னும் பெயரில் ஓர் ஆங்கில வார இதழ் வெளிவந்தமையை நம்முள் பலர் மறந்திருக்க மாட்டார்கள். அதே கட்டமைப்பில், அவ்விதழாசிரியர் கடைப்பிடித்த நெறிமுறைகளுக்கமைய, ஒரு புதிய செய்தி இதழை வெளியிடுதல் பயன்விளைக்கும் ஒன்றாகும்.

இது ஓர் இடரார்ந்த முயற்சி எனப் பலர் பின்னிற்க முற்படுவர். நம் மினத்தின் விடிவே குறிக்கோள். அதனை எய்த ஒரு விலை கொடுத்தேயாக வேண்டும். மந்திரத்தால் மாங்காய் விழுவதில்லை. எளியனவற்றையே செய்யும் சிறியோராகாது, அரியன செய்யும் பெரியோராக விரும்பாதார் யார்?

ஆகவே நேரக் கூடிய இடர்களுக்கு அஞ்சாமையோடு முகங்கொடுத்தவாறே இம்முயற்சியிலீடுபடுமாறு நல்லறிஞர்களையும், பொருள்வளமுள்ள நன்நெஞ்சினரையும் வேண்டுகிறோம்.

நம்மிடையே ஓர் ஆங்கில செய்தி இதழ் உலவுவதால் வேறொரு நற் பயன்விளைவதற்கும் இடமுண்டு. ஆங்கிலம் பயில்வோர் இந்நாளில் அம்மொழியைச் செவ்வையாகக் கற்பதில்லை. வாசிப்புப் பழக்கம் குன்றி வருதல் இதற்கொரு காரணம். ஆங்கில நூல்கள் ஆடம்பரப் பொருள்களைப் போன்று பெருவிலையுடையனவாக இருத்தலின், விரும்புவோரும் அவற்றைக் கொள்முதல் செய்ய முடிவதில்லை.

இந்நிலையில் ஓர் ஆங்கிலச் செய்தி இதழை அடிக்கடி காணும் பேறு பெற்றோர், தமக்குள்ள மொழி அறிவினூடு அது கூறும் செய்திகளை அறிந்து கொள்ளவே விழைவர். பள்ளிகள் மட்டுமன்றிப் பல பெற்றோரும் இம்முயற்சிக்கு ஊக்கமளிப்பர். இதனால், நம் இளந்தலைமுறையினருக்கு உலகளாவிய இம்மொழியில் தேர்ச்சி ஏற்பட வழி கிடைப்பதோடு, செய்திகளாலும் கருத்துகளாலும் அவர்கள் பயன்பெறுவதற்கான வாய்ப்பும் கிட்டுகிறது.

ஆகவே இவ்வேண்டுகோள் செயல் வடிவம் பெறுவதைச் சிந்தனைத் தெளிவுள்ளோர் அனைவரும் வரவேற்பர். தக்கோர் ஆவன செய்வார்களாக?

*வண்ணார்பண்ணை.* **- கங்காதரன்.**

## இவர்களுக்கு எழுதுநர் நியமனமா?

16-08-2001ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் வெளியான "மாகாணப் பொதுச்சேவைச் சிற்றூழியர்களை மாகாணப் பொது எழுதுநர் சேவையில் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை" என்ற தலையங்கத்தின் கீழ் வந்த விளம்பரத்திற்கமைய மூன்றாண்டுகள் சிற்றூழியர்களாக இருந்து முப்பது வயதிற்கு மேற்பட்டவர்களாக இருந்தால் ஜி.சீ.ஈ.சாதாரண தரத்தில் சித்தியடையாதவர்களாக இருந்தாலும் இவர்கள் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

உண்மையில் இந்தச் சிற்றூழியர்கள் அரசியல் கட்சியொன்றின் ஆதரவாளர்களே. அரச நிறுவனங்களிலும் பாடசாலைகளிலும் நியமிக்கப்பட்ட இவர்கள் பெரும்பாலும் அந்தக் கட்சிக்காக அரசியல் பேசுபவர்களே.

கடைசியாக நடைபெற்ற மேதின ஊர்வலத்தில் வடக்குக் கிழக்கில் இவர்கள் முன்னின்று அந்தக் கட்சியின் ஊர்வலங்களை நடத்தினார்கள். அந்தக் கட்சியின் ஊர்திப்பவனியில் அந்தக் கட்சியைப் பற்றும் பிடிக்கும் பல ஊர்திகள் கொண்டு சென்றும் உள்ளனர்.

அதற்கு நன்றிக் கடனே ஜி.சீ.ஈ. சாதாரணதரத்தில் சித்தியடையாத இவர்களுக்கு வழங்கப்பட இருக்கும் எழுதுவினைஞர் பதவி மாற்றங்கள். போட்டிப் பரீட்சை என்பது தமிழ்மக்களை ஏமாற்றும் ஒரு கண்கட்டு வித்தையே. வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு கல்வித் தகைமையற்ற இந்தச் சிற்றூழியர்களுக்குப் பரீட்சையில் சித்தியடைந்ததால்தான் பதவியுயர்வு வழங்கப்பட்டது போல் காட்டிக் கொள்ளவே இந்தப் பரீட்சை நடத்தப்படுகிறது.

இன்று என்னைப் போன்ற பலர் பட்டதாரிகளாக இருந்தும் நான்கு வருடங்களாக வேலையற்று இருக்கிறோம். இன்னும் எத்தனையோ இளைஞர், யுவதிகள் பல்கலைக்கழகப் பட்டம் பெற்றும், தொழில் நுட்பக் கல்லூரிகளில் பல பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்தும், கொம்பியூட்டர், தட்டெழுத்துத் துறைகளில் பல சான்றிதழ்களைப் பெற்றும் வேலையாய்ப்பின்றி வாடிக்கொண்டிருக்கும் பொழுது கல்வித் தகைமையற்ற சிற்றூழியர்களுக்கு எழுதுவினைஞர் நியமனங்கள் வழங்குவது நியாயமானதாக இந்த அரசியல் கட்சிக்குத் தென்படுகிறதா?

மூன்றாண்டுகள் மட்டும் சேவையாற்றிய தனது ஆதரவாளர்களான இவர்களுக்கு சிற்றூழியர் நியமனங்கள் வழங்கப்படும்போதே எழுதுவினைஞர் பதவி எதிர்பார்க்கப்பட்டனவா? அரசின் மேல் மட்டத்தில் தனக்கிருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்தி தனது ஆதரவாளர்களுக்கு இலைவான சுற்று நிருபங்களை அனுப்ப வைத்துத் தமிழ்மக்களை இந்த அரசியல் கட்சி ஏமாற்றுகிறதா?

இந்த அநீதிக்கு எதிராக ஏனைய அரசியல் கட்சிகளும் தமிழ் அரச அதிகாரிகளும் இந்த நியமனங்களால் பாதிக்கப்பட இருப்பவர்களும் குரல் கொடுப்பார்களா?

*யாழ்ப்பாணம்.* **சி.தவன்.**

# குழாய்க்கிணற்றுள் விழுந்த சிறுவனை உயிருடன் மீட்கும் முயற்சி தோல்வி

தமிழகத்தின் சென்னை மண்ணடியில் குழாய்க்கிணற்றினுள் விழுந்த 6 வயதுச் சிறுவனை மீட்க 3 நாள்கள் நடந்த போராட்டத்தில் மீட்புப் படையினர் தோல்வியடைந்தனர்.

ஆழ்குழாய்க் கிணற்றுக்காக இயந்திரம் மூலம் தோண்டப்பட்ட ஒரு அடி அகலமும், 35 அடிகள் ஆழமும் உடைய குழிக்குள் கடந்த வியாழக்கிழமை தமிழ் மணி என்ற சிறுவன் தவறி விழுந்தான்.

இதனையடுத்து அந்தக் குழிக்குப் பக்கத்தில் மற்றொரு குழியைத் தோண்டி அதன் வழியே சிறுவனை உயிருடன் மீட்கும் முயற்சியில் கட்டடப் பொறியியலாளர்கள், பொலீஸார், தீயணைப்புப் படையினர் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் ஈடுபட்டனர்.

அவர்கள் சிறுவனை அணுகும் நிலை உருவாகி வந்த சமயத்தில் நேற்றுமுன்தினம் இரவு குழிக்குள் விழுந்து கிடந்த சிறுவனின் உயிர் பிரிந்தது. (ஒ)

# இரு தொண்டு அமைப்புகளுக்கு ஆப்கானிஸ்தானில் தடைவிதிப்பு

காபூல்,செப்.3

ஆப்கானிஸ்தானில் செயற்படும் இரண்டு வெளிநாட்டு தொண்டு அமைப்பு களுக்கு தலிபான் அரசு தடைவிதித்துள்ளது.

ஏற்கனவே, மதமாற்றத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தலிபான் ஆட்சியாளர்களினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டு உதவிப் பணியாளர்களுடன், இந்த இரு அமைப்புகளும் தொடர்பு கொண்டிருந்ததாகக் கூறப்படுவதின் அடிப்படையிலேயே மூடப்பட்டதாகத் தலிபான் தரப்பு தெரிவித்தது.

தடைசெய்யப்பட்ட அமைப்புகளின் அலுவலகங்கள் நேற்று முன்தினம் தலிபான்களால் மூடப்பட்டதாகவும் -

அதனைத் தொடர்ந்து, அந்த அமைப்புகளில் பணியாற்றிய வெளிநாட்டவர்கள் நேற்றுக் காலை ஆப்கானிஸ்தானிலிருந்து புறப்பட்டுச் சென்றதாகவும் -

ஆப்கானியஸ்தானியச் செய்தியாளர்கள் கூறியுள்ளனர். (ஒ-4)

## அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில்

# காஷ்மீர் பொலீஸ் சுட்டதில் பத்து வயதுப் பாலகன் பலி!

ஸ்ரீநகர்,செப்.3

இந்தியக் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீரில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தின் போது, பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 10 வயதுப் பாலகன் ஒருவன் பலியானான்.

பாரமுல்லா மாவட்டத்தில் அரசின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுமுன்தினம் சுமார் 3 ஆயிரம் பேர் திரண்டு நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இதற்கிடையில், எல்லைப்புற மாவட்டமான ரஜோரியில் இந்தியப் படையினருக்கும் பாகிஸ்தானிய இராணுவத்தினருக்கும் இடையே பிரங்கிச் சண்டை இடம்பெற்றதாகவும்-

இதில் பாகிஸ்தானியப் படையினர் 8பேர் கொல்லப்பட்டதாகவும் - இந்திய இராணுவம் தெரிவித்தது.

கடந்த ஜூலை மாதத்தில் நடந்த ஆக்ரா உச்சி மாநாட்டின் பின்னர் இடம்பெற்ற முதலாவது பாரிய மோதல் இது என்று கூறப்படுகிறது. (ஒ-4)



சிங்கத்தையும் புலியையும் ஜோடி சேர்க்கும் சிரமமான முயற்சியில் ஜோர்டான் மிருகக் காட்சிச்சாலைப் பராமரிப்பாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதற்காக, கடந்த மாதம் 30ஆம் திகதி முதல், 7 வயதான ஜஸ்ஸாஸ் என்ற ஆண் சிங்கத்தையும், வர்தா என்ற 6 வயதான பெண் புலியையும் ஒன்றாக இணைத்துள்ளனர்.

ஜஸ்ஸாஸின் காதல் கோரிக்கைகளுக்கு தற்போது வர்தா முகத்தைத் திருப்பிக் கொண்டாலும், வர்தா விரைவில் தாயாகிவிடுவாள் என்று மிருகக்காட்சிச் சாலைப் பணியாளர்கள் நம்புகின்றனர். காட்டு ராஜா ஜஸ்ஸாஸின் காதற்கணையை கோபத்துடன் வர்தா நிராகரிப்பதையே இங்கு காண்கிறீர்கள்.

## மேற்குக்கரை துப்பாக்கிச் சமரில்

# இரு பலஸ்தீனர்கள் சுட்டுக்கொலை!

ஜெருசலேம்,செப்.3

மேற்குக் கரைப் பிரதேசத்தில் உள்ள பலஸ்தீன நகரான கப்ரூனில் நேற்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சமரில் இரண்டு பலஸ்தீனர்களை இஸ்ரேலிய இராணுவத்தினர் சுட்டுக்கொன்றனர்.

இந்தச் சமரின்போது 8 வயதுச் சிறுவனும், இஸ்ரேலியப் படைவீரர் ஒருவரும் காயமடைந்தனர்.

இந்தச் சண்டையை அடுத்து, கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதல் மேற்குக் கரை மற்றும் காஸா பிரதேசத்தில் பலஸ்தீனர்களுக்கும், இஸ்ரேலியப் படையினருக்குமிடையே நடந்துவரும் மோதல்களை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சிகளில் மீண்டும் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான மோதல்களை முடிவுக்குக் கொண்டுவந்து மேற்காசியப் பிராந்தியத்தில் அமைதியை ஏற்படுத்தும் வகையில் பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத், இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் சிமோன் பெரஸ் ஆகியோருடன் பேச்சு நடத்துவது தொடர்பாக இத்தாலி மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் முன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)



பலஸ்தீனத் தீவிரவாதிகளின் தாக்குதலுக்குப் பதிலடியாக மேற்குக் கரையில் உள்ள பலஸ்தீன நகரான பெய்ட் ஜாலாவை ஆக்கிரமித்த இஸ்ரேலியப் படையினர் கடந்த வியாழக்கிழமை அந்த நகரிலிருந்து வெளியேறினர்.

அதனையடுத்து அங்கு இடம்பெற்ற கொண்டாட்டங்களின்போது பலஸ்தீனச் சிறுவர்கள் மரத்துப்பாக்கிகளை மட்டுமன்றி நிஜத் துப்பாக்கிகளுடனும் கலந்துகொண்டனர். அப்போது எடுக்கப்பட்ட படம்.

## அகதிகள் பிரச்சினை தீராமல்

# மஸிடோனிய நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்ட சபாநாயகர் மறுப்பு

ஸ்கோப்ஜே,செப்.3

மஸிடோனியாவின் நாடாளுமன்ற நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்க சபாநாயகர் ஸ்டோஜன் என்டோவ் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

அல்பேனியத் தீவிரவாதிகள் கைப்பற்றிய பிரதேசங்களிலிருந்து, வெளியேறிய மஸிடோனிய மக்கள் மறுபடியும் தத்தமது சொந்த இடங்களில் குடியேற்றப்பட்ட பின்னரே மஸிடோனிய நாடாளுமன்றம் மீண்டும் கூட்டப்படும் என்று அவர் தெரிவித்தார்.

பொது மக்கள் பாதுகாப்பற்ற அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளவேளையில், நாட்டின் அரசியல் சீர்திருத்தம் சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் விவாதிப்பதின் மூலம் மட்டும் தீர்வுகளை எட்ட முடியாதென்றும் -

தற்போது தமது சொந்த இடங்களைவிட்டு வெளியேறியுள்ள பொது மக்கள், தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதை ஜனாதிபதி உறுதி செய்த பின்னரே நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுவது குறித்து தீர்மானிக்க முடியும் என்றும் - சபாநாயகர் உறுதிபடத் தெரிவித்துவிட்டார்.

இதேவேளை -

மஸிடோனியாவில் அல்பேனியர்களின் நலன்களுக்காகப் போராடிவரும் அல்பேனியத் தீவிரவாதிகளிடமிருந்து ஆயுதங்களை மீளப்பெறும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருப்பதாகவும் -

ஆயுதங்களை மீளப்பெறும் முதற்கட்ட நடவடிக்கைகள் முடிவுற்றபோதிலும், நாடாளுமன்றத்தின் அனுமதியின்றி இரண்டாவது கட்டத்தைத் தொடர முடியாதென்றும் - 'நேட்டோ' அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# மிலோசெவிக்கின் ஆட்சேபம் நீதிமன்றத்தால் நிராகரிப்பு

ஐநாவின் போர்க் குற்றவியல் நீதிமன்றத்தால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டதை, யூகோஸ்லாவியாவின் முன்னாள் அதிபர் சொலபொடான் மிலோசவிக் ஆட்சேபிக்க முடியாதென்று ஹேக்கில் உள்ள நீதிமன்றம் ஒன்று தெரிவித்துள்ளது.

போர்க்குற்றங்களுக்காகத் தான் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து மிலோசவிக் ஹேக் நீதிமன்றம் ஒன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பாகக் கூறுகையிலேயே நீதிமன்றம் இவ்வாறு தெரிவித்தது.

போர்க்குற்ற நீதிமன்றம் தொடர்பான, மிலோசெவிக்கின் ஆட்சேபனை மனுவை விசாரிக்க இந்த நீதிமன்றத்துக்கு அதிகாரம் கிடையாது என்றும்-

தேசிய மற்றும் சர்வதேச சட்டங்கள் போர்க்குற்றவியல் நீதிமன்றத்தின் விசாரணைகளை அங்கீகரிப்பதால், மிலோசெவிக்கின் மீதான விசாரணை தொடர்பாக ஆட்சேபிக்க முடியாதென்றும் -

நீதிமன்றம் மேலும் தெரிவித்தது. (ஒ-4)

## அமைச்சரவையில் அதிரடி மாற்றம்

புதுடில்லி,செப்.3

இந்தியாவின் மத்திய அமைச்சரவையில் நேற்றுமுன்தினம் பிரதமர் வாஜ்பாய் அதிரடி மாற்றங்களைச் செய்துள்ளார்.

அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ள வேளையில், 4 இணை அமைச்சர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

ஆயினும் முன்னாள் அமைச்சர்களான ஜோர்ஜ் பெர்னாண்டஸ், மமதா பனர்ஜி ஆகியோர் அமைச்சர்களாகப்படவில்லை. (ஒ)

# எய்ட்ஸால் இறப்போர் தொகை தாய்லாந்தில் கணிசமாக உயர்வு

பாங்கொக்,செப்.3

தாய்லாந்தில் விபத்துகள் மற்றும் இருதய நோய்கள் ஆகியவற்றால் இறப்பவர்களைவிட, அதிக எண்ணிக்கையானோர் 'எய்ட்ஸ்' நோயால் இறப்பதாக தாய்லாந்து சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

குறிப்பாக கிராமப் புறங்களில் 'எய்ட்ஸ்' மரணங்கள் அதிகரித்திருப்பதாகவும் -

தாய்லாந்தின் 60 மில்லியன் மக்களின் 10 இலட்சம் பேர் எய்ட்ஸ் நோயால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் - அமைச்சகம் மேலும் தெரிவித்தது.

வெளிநாடுகளைச் சேர்ந்த சட்ட விரோதக் கும்பல்களுக்கு, தாய்லாந்து செயற்பாட்டு மையமாக இருப்பதால், 'எய்ட்ஸ்' பரவும் வீதம் அதிகரித்தது வருவதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

பாலியல் தொழில் தாய்லாந்தில் கட்டுப்படுத்த முடியாத அளவில் வியாபித்திருப்பதால் அரசு மேற்கொள்ளும் 'எய்ட்ஸ்' தடுப்பு நடவடிக்கைகள் பெரும்பாலும் பயனற்று விடுவதாகவும் அவர்கள் கவலை தெரிவித்தனர்.

# கொங்கோவில் உள்ள அந்நிய படைகள் வெளியேற கோபி அனான் கோரிக்கை

ஹின்சாஸா,செப்.3

கொங்கோ ஜனநாயகக் குடியரசில் அமைதியை ஏற்படுத்தும் பணியில் ஐநா. அமைதிப்படை கண்காணிக்கும் என்றும் ஆகவே, அங்கு நிலைகொண்டுள்ள பிற நாட்டுப் படைகள் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்றும் ஐ.நா.செயலாளர் நாயகம் கோபி அனான் கேட்டுள்ளார்.

கொங்கோவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அனான் தனக்கு வழங்கப்பட்ட வரவேற்பை ஏற்றுக்கொண்டு உரையாற்றியபோதே இந்த வேண்டுகோளை விடுத்தார்.

கொங்கோவில் இடம்பெறும் உள்நாட்டு மோதலை முடிவுக்குக் கொண்டுவர கடந்த ஆறு மாதகாலமாக மேற்கொள்ளப்பட்டுவரும் அமைதி முயற்சிகளுக்கு அனானின் விஜயம் வலுச் சேர்க்கும் என்று கருதப்படுகிறது.

கொங்கோவில் சமாதானத்தை ஏற்படுத்தும் பொருட்டு கொங்கோ அரசும், எதிர்க்கட்சிகளும், தீவிரவாதிகளிடம் அடுத்த மாதம் பேச்சு நடத்தவுள்ளன.

இந்தப் பேச்சு கொங்கோவின் நிரந்தர சமாதானத்துக்கு வழிகோலும் என்று அனான் நம்பிக்கை தெரிவித்தார்.

கொங்கோவின் இறைமையை உறுதிப்படுத்தும் வகையிலேயே ஐநா. படை கொங்கோவில் உள்ளதாகவும் -

ஆகவே ஏனைய வெளிநாட்டுப் படைகள் வெளியேறவேண்டும் என்றும் - அனான் கேட்டுள்ளார். (ஒ-4)

# விண்வெளித் தொலைநோக்கி மூலம் கருந்துளைகள் பற்றிய புகைப்படம்

நாஸா,செப்.3

பிரபஞ்சத்தில் காணப்படும் கருந்துளைகள் (Black hole) பற்றிய பல புகைப்படங்களை அமெரிக்காவின் விண்வெளித் தொலைநோக்கி பூமிக்கு அனுப்பிவைத்துள்ளது.

சூரியனைவிடக் கிட்டத்தட்ட இரண்டரை மடங்குக்கும் அதிகமான எடை கொண்ட நட்சத்திரங்கள், இறுகிச் சுருங்குவதால், அவற்றிலிருந்து வெளிப்படுத்தப்படும் கூடிக அடர்த்தியான நியூட்ரான் துகள்களே கருந்துளை என்று அழைக்கப்படுகின்றது.

ஒளி கூட ஊடுருவமுடியாத அளவுக்கு அடர்த்தி கொண்ட கருந்துளைகளை சாதாரண தொலைநோக்கிகள் மூலம் பார்த்தறிய முடியாது.

அமெரிக்க விண்வெளி நிறுவனமான 'நாஸா' விண்வெளியில் நிறுத்தியுள்ள தொலைநோக்கியுடன் இணைக்கப்பட்ட புகைப்படக் கருவி மூலமே கருந்துளை பற்றிய புகைப்படங்கள் தற்போது பெறப்பட்டுள்ளன.

(ஒ-4)

# சமாதானத்துக்காகப் புலிகளுடன் அரசு பேசுவதை எதிர்க்கமாட்டோம்!

## ஜே. வி. பி. பிரமுகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் செப். 3

யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்த அரசு விடுதலைப் புலிகளுடன்பேச்சு நடத்துமானால் அதை எதிர்க்கமாட்டோம் என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர திசாநாயக்கா தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சு ஆரம்பிப்பது குறித்துக் கருத்து வெளியிடுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;-

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பில் அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதை ஜே.வி.பி. ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. ஒற்றையாட்சியின் கீழ் சகல இனமக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வே நிரந்தரமான தீர்வாக அமையமுடியும்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அதிகாரப் பரவலாக்கல் பரிகாரமாகாது. இதன்மூலம் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் மத்தியில் பிளவுகளே ஏற்படும். ஒற்றையாட்சியின் கீழ் அனைத்து இன மக்களும் உரிமைகளுடன் வாழும் தீர்வே இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமைய முடியும்.

யுத்தம் நாட்டைச் சீரழித்துவிட்டது. இதனைத் தீர்த்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த அரசாங்கம் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளுமானால் அதனை நாம் எதிர்க்கமாட்டோம்.

ஆனால், கடந்த ஏழு வருடங்களாக யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பில் அரசாங்கம் எதுவித பயன்தரும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாத நிலையில் இப்போது இது விடயத்தில் சரியான முடிவெடுக்கும் என்பதை எம்மால் கூறமுடியாது.

நாம் முன்வைத்துள்ள ஒரு வருடகால இடைக்கால அரச நிர்வாக இடைவெளியில் இனப்பிரச்சினை போன்றதொரு தேசியப் பிரச்சினையை ஆழமாக ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டிய பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கக்கூடாதென்பதே எமது நிலைப்பாடாகும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்வதிலேயே தங்கியுள்ளது. அரசாங்கம் முதலில் தமிழ் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக்கப்படவேண்டும். சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் மற்றும் சகல அரசியல் கட்சித் தலைவர்கள், மதத் தலைவர்கள் இணைந்து அமைப்பொன்றை உருவாக்கி இனப் பிரச்சினைக்கான தீர்வு என்ன என்பதை ஆராய்ந்து, அதனை தமிழ் மக்கள் முன்வைக்கவேண்டும் — என்றார்.

# அரசு - புலிகள் பேச்சுக்கு படைத் தளபதிகள் ஆதரவு

கொழும்பு, செப். 3

விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சு நடத்துவதைத் தாங்கள் ஆட்சேபிக்கப் போவதில்லை என்று படைத் தளபதிகள் தெரிவித்திருக்கின்றனர்.

கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் தளபதிகள் இதனைத் தெரிவித்ததாக 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது.

யுத்த நிறுத்தம் செய்து விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்குத் தயாராக இருப்பதாக அரசு அறிவித்ததும்—

அரசின் அந்த அறிவிப்பை புலிகள் நிராகரித்ததும்— தெரிந்ததே.

வெள்ளியன்று நடைபெற்ற பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இது குறித்து ஆராயப்பட்டிருக்கிறது.

புலிகளுடன் அரசு பேச்சு நடத்துவதை தாங்கள் ஆட்சேபிக்கப் போவதில்லை என்று கூட்டுப் படைகளின் தளபதி ஜெனரல் றோஹான் தளுவத்த, விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் ஜயலத் வீரக்கொடி ஆகியோர் உட்பட படைத் தளபதிகள் அங்கு கூறயதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## முன்பள்ளிகள் பதிவு

வடமராட்சி கிழக்கு, செப்.3

வடமராட்சி கிழக்கிலுள்ள 12 முன்பள்ளிப் பாடசாலைகள் வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் பதிவு செய்யப்பட்டுப் பதிவு இலக்கங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இடம்பெயர்வின் காரணமாக தற்போது அப்பகுதியில் 5 முன்பள்ளிப் பாடசாலைகளே இயங்கி வருகின்றன. (ஐ-182)

## சிமெந்து தொழிலாளர் கலந்துரையாடல்

வலி வடக்கு, செப். 3

காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபனத்தை மக்கள் கம்பனியாக மாற்றுவது குறித்து ஆராய்வதற்கான கலந்துரையாடல் ஒன்று சிமெந்துக் கூட்டுத்தாபன பொதுத்தொழிலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தட்டாதெரு சந்திக்கு அருகில் உள்ள 'மில்க்வைற்' தொழிலகத்தில் இடம்பெறவுள்ளது.

கூட்டுத்தாபனத்தை மக்கள் கம்பனியாக மாற்றுவதற்கு பெரும்பாலான கூட்டுத்தாபன ஊழியர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர் என்று கூறப்படுகிறது. இத்தகைய ஒரு நெருக்கடியான சூழலிலேயே அடுத்த கட்டமாக எத்தகைய நடவடிக்கையில் ஈடுபடுவது என்பது சம்பந்தமான முக்கிய விடயங்கள் இக் கலந்துரையாடலில் ஆராயப்படவிருக்கின்றன.

காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம் அண்மையில் வடமாகாண அபிவிருத்தி புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். (க-4-86)

## நிவாரண உணவு முத்திரை விநியோகம்

காரைநகர், செப். 3

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவில் உலர் உணவு நிவாரணம் பெறுபவர்களுக்கு 95 ஏ, பி புள்ளிகளுக்குரிய உலர் உணவு நிவாரணம் உணவு முத்திரைக்கே வழங்கப்படவுள்ளது.

இந்த உணவு 'முத்திரைகளை அடுத்தவாரம் தொடக்கம் தத்தமது கிராம சேவையாளர்களிடம் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து ஆறு மாதங்களுக்கு இந்த உணவு முத்திரை மூலம் நிவாரணப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளமுடியும். (ஐ-73)

# ஜே.வி.பி. ஆதரவு இன்றியே அரசை தோற்கடிப்போம்!

## கருணசேன கொடித்துவக்கு கூறுகிறார்

கொழும்பு,செப். 3

ஜே. வி. பி மற்றும் சிஹல உறுமய ஆகியவற்றின் ஆதரவு இன்றியே அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிறைவேற்ற முடியும் என்று ஐ.தே.கட்சியின் பேச்சாளர் கருணசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

தகுதிகாண் அரசு ஒன்றை அமைப்பதற்கு ஜே. வி. பி. ஆதரவு வழங்க முன்வந்துள்ளமை தொடர்பாகக் கருத்துக் கூறுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அரசுடன் இந்தக் கட்சிகள் கலந்துரையாடி வந்த போதும் இன்னமும் எமது அணியிலேயே அவை இருக்கின்றன.

நாடாளுமன்றத்தைக் கூட்டவேண்டும், சர்வஜன வாக்கெடுப்பை ரத்துச்செய்ய வேண்டும் என்ற எமது கோரிக்கைகளையே ஜே.வி.பி அரசிடம் முன்வைத்துள்ளது. அந்தக் கோரிக்கைகளை அரசு நிறைவேற்ற முன்வந்தால் அது எமக்குக்கூட வெற்றியாகவே அமையும் — என்றார் அவர். (ஐ-3)

# மினி பஸ்ஸில் ஏறமுயன்ற சிறுமி சக்கரத்தில் சிக்குண்டு பலி!

## சுன்னாகத்தில் பரிதாப சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 3

வீட்டில் தரித்து நின்ற மினி பஸ்ஸை வெளியே எடுத்த சமயம், அதில் ஏற முயன்ற மினிபஸ் உரிமையாளரின் மகள் தவறுதலாகக் கீழே விழுந்து சக்கரத்தில் சிக்கி உயிரிழந்தார்.

இந்தப் பரிதாபச் சம்பவம் நேற்றுக்காலை 6 மணியளவில், சுன்னாகம் ரயில் நிலையம் அருகே உள்ள வீடொன்றில் இடம்பெற்றது.

வல்லிபுரம் விமலதாஸ் என்பவர் மினிபஸ்ஸை வெளியே எடுத்த சமயம் அவரது மருமகளான பென்சிகா குணசீலன் (வயது 6) வானில் ஏற முயற்சித்ததாகவும்—

அந்தச் சிறுமியை வீட்டினுள் செல்லுமாறு கூறிவிட்டு சிறுமி சென்றுவிட்டதாக நினைந்து வானைச் செலுத்திய சமயம் அதில் ஏற முயன்ற சிறுமி தடுக்கி விழுந்து, வானின் சக்கரம் ஏறி உயிரிழந்ததாகவும்—

தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணையின் பின்னர் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சிறுமியின் சடலம் ஒப்படைக்கப்பட்டது. (ஒ-15)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், செப். 3

புலோலி முள்ளியான் மண்டலாய் சித்தி விநாயகர் ஆலய மணவாளக் கோல அபிஷேக விழா நாளை மறுதினம் புதன் கிழமை நடைபெறும். (க-4)

★ ★ ★

யாழ்ப்பாணம், செப். 3

குப்பிளான் ஸ்ரீகௌரி அம்பாள் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் புதன் கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும். (க-4)

★ ★ ★

வலி தெற்கு செப். 3

சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானத்தில் அமைக்கப்பட்டுள்ள பஞ்சதள இராஜ கோபுரத்துக்கான மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 6.40 மணிக்கும் 8.26 மணிக்கும் இடையில் நடைபெற உள்ளது.

கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்கக்கிரியைகள் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாக உள்ளன.

ஸ்ரீநாகபூஷணி அம்பாளுக்கு நவோத்தர சத சங்காபிஷேகமும், பரிவாரமூர்த்திகளுக்கு ஏக கலச அபிஷேகமும் நடைபெற்று, இராஜகோபுரத்துக்கான மகாகும்பாபிஷேகம் இடம்பெறும். (க-152)

## பாழடைந்த 8 கிணறுகள் புனரமைப்பு

பட்டினிக்கெதிரான நிறுவனம் உடுவில் பொதுச் சுகாதார பரிசோதகர் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் கடந்த மூன்று மாத காலத்துக்குள் எட்டு பாழடைந்த பொதுக் கிணறுகளைப் புனரமைப்புச் செய்து மக்கள் பாவனைக்குக் கையளித்துள்ளது.

உடுவில் மல்வம் மட்டக்காட்டு கிராமத்தில் எட்டாவது கிணறு புனரமைக்கப்பட்டு பொதுமக்களுக்குக் கையளிக்கும் வைபவம் அண்மையில் நடைபெற்றது.

இவ் வைபவத்தில் உடுவில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் செ. லோ. ஜெபராசா, கிராம சேவையாளர் எஸ். திருநாவுக்கரசு, பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் பிரதிநிதி எஸ். ராசேந்திரம் உட்பட பலர் கலந்து கொண்டனர். (க-152)

# பீரிஸ், திஸநாயக்கா இருவருடனும் சமரசம் செய்ய ஜனாதிபதி மறுப்பு

கொழும்பு, செப். 3

ஜனாதிபதியுடன் முரண்பாடு கொண்டுள்ளதாகக் கூறப்படும் அமைச்சர்களான ஜி. எல். பீரிஸ், எஸ். பி. திஸநாயக்கா ஆகியோருடன் சமரசம் செய்து கொள்ள முன்வருமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஜனாதிபதி நிராகரித்து விட்டதாகக் கூறப்படுகிறது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் கடந்தவாரம் நடைபெற்ற போது பிரஸ்தாப அமைச்சர்களுடன் சமரசம் செய்து கொள்ளுமாறு அமைச்சர் பட்டி வீரக்கோன் ஜனாதிபதியிடம் வேண்டுகோள்விடுத்திருந்தார்

அந்த வேண்டுகோளை நிராகரித்துவிட்ட ஜனாதிபதி, ''உரியநேரம் வரும் போது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று கூறியிருப்பதாக 'சண்டே ஐலண்ட்' பத்திரிகை தெரிவித்திருக்கிறது. (ஐ)

## விளையாட்டு நிகழ்வு

வலிவடக்கு, செப். 3

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நவாலி நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்திவரும் 7பேர் பங்குபற்றும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நவாலி அட்டகிரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

★ அராலி எ. எல். விளையாட்டுக்கழகம் எதிர் சுன்னாகம் காந்தி நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம்.

★ அளவெட்டி கலைவாணி விளையாட்டுக்கழகம் எதிர் ஊரெழு பாரதி விளையாட்டுக்கழகம். (ஐ-81)

# தான்தோன்றீஸ்வரர் ஆலய இரதோற்சவத்தில் சனத்திரள்

## இரு தரப்பினராலும் பக்தர்கள்சோதனை

மட்டக்களப்பு, செப். 3

வரலாற்றுச் சிறப்பு மிக்க மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான் தோன்றீஸ்ஈஸ்வரர் ஆலய வருடாந்த தேர் உற்சவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மிகவும் பக்தி பூர்வமாக நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் பல்லாயிரக் கணக்கானபக்தர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள இந்த ஆலயத்துக்குச் செல்ல, அம்பலாந்துறை — ஒட்டுமடம் இயந்திரப் பகுதி வழியாகவும், பட்டிருப்புப் பாலம் வழியாகவும் பயணம் செய்த பக்தர்கள் படையினரின் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

பக்தர்களுடன் எதிரிகளும் சேர்ந்து ஊடுருவக் கூடுமென்பதனால் விடுதலைப் புலிகளும் தமது கண்காணிப்பு நடவடிக்கைகளைத் தீவிரமாக்கியிருந்ததாகவும் தெரிய வருகிறது.

இதேவேளை —

மண்டூர் கந்தசுவாமி கோயில், சித்தாண்டி சித்திர வேலாயுதர் கோயில் ஆகியவற்றின் வருடாந்த தேர் உற்சவமும் நேற்று நடைபெற்றுள்ளன. (ஐ-9)

உதயன்

## இலங்கை அரசு இனியாவது திருந்துமா?

தென்னாபிரிக்காவின் டேர்பன் நகரில் தற்போது நடைபெற்றுவரும் - இனப்பாகுபாட்டிற்கு எதிரான - ஐ.நாவின் மாநாட்டை ஒட்டி அங்கு இடம் பெற்றுவரும் பல்வேறு நிகழ்வுகளில் ஈழத் தமிழருக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசால் காட்டப்பட்டுவரும் இனப்பாகுபாட்டை வெளிப்படுத்தும் பல்வேறு அம்சங்களும் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கின்றன.

மாநாட்டின் ஆரம்ப வைபவத்தின் போது மாநாட்டு மண்டபத்துக்கு வெளியே நடத்தப்பட்ட பெரும் ஆர்ப்பாட்டம் மற்றும் பேரணியில் ஈழத் தமிழரின் அவலத்தைச் சித்திரிக்கும் பல்வேறு பதாகைகளும், படங்களும் ஏந்திச் செல்லப்பட்டன. பெரும்பான்மைச் சிங்கள அரசின் அடக்குமுறைக்கு எதிராக, ஈழத்தமிழர்கள் மட்டுமல்லாமல் இனப்பாகுபாட்டுக்கு எதிரான பலதேசத்து மக்களும் - ஆர்வலரும் - அங்கு குரல் எழுப்பினர்; ஒடுக்கப்படும் ஈழத்தமிழர்களுக்கு தங்களது முழு ஆதரவையும் ஐக்கியத்தையும் அவர்கள் வெளிப்படுத்தினர்.

தென்னாபிரிக்கத் தமிழ் இணைப்புக் குழுவும் இலங்கைத் தமிழர்களின் பரிதாப நிலையை எடுத்து விளக்கும் வகையில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை அங்கு தற்போது நடத்தி வருகின்றது.

அது ஏற்பாடு செய்த ஒரு கூட்டத்தில் பல்வேறு நாட்டுப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். அங்கு உரையாற்றிய - யாழ்.கத்தோலிக்க ஆயரின் முன்னாள் செயலாளரும், முன்னாள் யாழ்.குரு முதல்வருமான - வண.ஜோசப் இமானுவல் அடிகளார், "ஈழத்தில் தமிழ் மக்கள் அவர்களது மொழி, கலாசாரம், கல்வி, சமயம், பொருளாதாரம் உட்பட சகல துறைகளிலும் ஒடுக்கப்படுகிறார்கள். இனி மேலும் எங்களை சம பிரஜைகளாக இலங்கை அரசு கணிக்கும் என்பதில் எமக்கு நம்பிக்கை இல்லை" - என்று தெரிவித்திருக்கின்றார். தமிழ் மக்களின் அவல வாழ்வை தமது அனுபவப் பகிர்வுகள் ஊடாக அவர் விளக்கினார். அவரது உரையை அடுத்து, அங்கு குழுமியிருந்த சர்வதேச மனித உரிமைக் காப்பாளர்கள் பலரும் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்படுவதற்கு எதிராகக் கண்டனக் குரல் எழுப்பினர்.

இதேவேளை, டேர்பன் மாநாட்டின் செயலாளர் மேரி றொபின்சனுக்கு தமிழர் மனித உரிமை மையம் அனுப்பி வைத்துள்ள மகஜரில் ஈழத்தமிழரின் அரசியல் பிரச்சினையின் பின்னணி தெளிவாக எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றது. சிங்களக் குடியேற்றம், கல்வி, வேலைவாய்ப்பு, சமயம், இராணுவ நடவடிக்கையின் விபரீதங்கள் போன்ற பல விடயங்களை புள்ளிவிவரங்கள் மற்றும் ஆதாரத்துடன் தமிழர் மனித உரிமை மையம் சமர்ப்பித்திருக்கின்றது.

இதுதவிர, டேர்பன் மாநாட்டை ஒட்டி அரச சார்பற்ற நிறுவனங்கள் அங்கு ஏற்பாடு செய்திருக்கும் மற்றோர் இணைய மாநாட்டில், நிறைவேற்றப்படும் பிரேரணையில் இலங்கை இனப்பிரச்சினை குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணம்- தமிழர் தாயகப் பூமி - இப்போது ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசம் என்று அந்தப் பிரேரணை கூறுகின்றது. இதன் மூலம் சிங்களப் பெரும்பான்மையின் ஆக்கிரமிப்பை சர்வதேச - அரச சார்பற்ற - நிறுவனங்கள் சர்வதேச மாநாடு ஒன்றில் ஒட்டுமொத்தமாக ஒப்புக் கொள்ளப்போகின்றன.

இவ்வாறாக டேர்பன் மாநாடு - இனப்பாகுபாட்டுக்கு எதிரான - தனது முயற்சியில், இலங்கையின் சிங்களப் பெரும்பான்மை அரசின் இனப்பாகுபாட்டுப் போக்கை சர்வதேச மட்டத்தில் அம்பலப்படுத்த உதவப் போகின்றது.

சர்வதேச மட்டத்தில் இவற்றை அம்பலப்படுத்தினாலும்கூட, இலங்கை அரசு இது விடயத்தில் தனது போக்கை மாற்றித் திருந்துமா என்பது கேள்விக்குறியே.

இனப்பிரச்சினைக்குப் பேச்சு மூலம் சமாதானத் தீர்வு காண்பதற்காக அற்பசொற்ப வாய்ப்பைக் கூட -

புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்தக் கூடாது என்று சிங்களத் தீவிரவாதக் கட்சியான ஜே.வி.பி. விதித்த நிபந்தனையை ஏற்று - அக்கட்சிக்கு மண்டியிட்டு - தனது ஆட்சியைத் தொடர இணங்கியதன் மூலம் இலங்கையின் ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு சிதறடித்து விட்டது என்றே கூறவேண்டும்.

பாடசாலைகளில் பணிபுரியும்

# முகாமைத்துவ உதவியாளரின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு

## மாகாண அமைச்சின் செயலர் உறுதிமொழி

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் பணிபுரியும் பட்டதாரி முகாமைத்துவ உதவியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன் உறுதியளித்துள்ளார்.

அத்துடன் முகாமைத்துவ உதவியாளர்களுக்கு முகாமைத்துவ கடமைகள் வழங்கப்படுவதோடு அதற்கான பயிற்சிகள் வழங்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த கல்வி அமைச்சின் செயலாளரை முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தினர் சந்தித்த போது இந்த உறுதிமொழிகள் வழங்கப்பட்டதாக முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தின் தலைவர் இ.கிருஷ்ணகுமார் தெரிவித்தார்.

(க-117)

# நெடுந்தீவில் நாளை சாகித்திய விழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,செப்.3

நெடுந்தீவு உதவி அரச அதிபர் பணிமனை நடத்தும் பிரதேச சாகித்திய விழா நாளை செவ்வாய்க் கிழமை இரவு 7 மணிக்கு உதவி அரச அதிபர் பணிமனை முன்றிலில் நடைபெறவுள்ளது.

நெடுந்தீவு மற்றும் ஊர்காவற்றுறைப் பகுதிகளுக்கான உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பியின் தீவக அமைப்பாளரும், ஊர்காவற்றுறைப் பிரதேசசபைத் தலைவருமான ந.மதனராஜா பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் புலவர் ஏ.டபிள்யூ.அரியநாயகம், ஈ.பி.டி.பியின் நெடுந்தீவுப் பொறுப்பாளர் க.நவநீதன்(மோகன்), கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.அரசரட்ணம், ப.நோ.கூ.சங்க உப தலைவர் எஸ்.கணேசலிங்கம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

சிறப்பு நிகழ்ச்சிகளாக யாழ். நாச்சிமார்கோயிலடி ஸ்ரீதர் வில்லிசைக் குழுவினர், கவிமணி சைவப் புலவர் இராசையா ஸ்ரீதரன் தலைமையில் நடத்தும் "மங்கையர் மாண்பு" வில்லிசை, அகில இலங்கை அமுத சுரபிக் கலாமன்றம் வழங்கும் பட்டி மண்டபம், மாதனை கலாமன்றத்தினர் வழங்கும் காத்தவராயன் சிந்து நடைக் கூத்து என்பன இடம்பெறும்.

சாகித்திய விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் இந நிகழ்வில் வைத்து வழங்கப்படும். நெடுந்தீவு ஐக்கிய தீப சனசமூக நிலையத்தினர் பரிசில்களை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

நெடுந்தீவு மற்றும் ஊர்காவற்றுறை பகுதிகளுக்கான உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகத்தின் வழிப்படுத்தலில் நெடுந்தீவுக்கான கலாசார உத்தியோகத்தர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

(க-7)

## நாட்டு நடப்பு

*ஏரம்பருக்கோ குழந்தை எட்டு*
*எட்டும் போனதவரை விட்டு*
*தாரமும் போட்டாள் விட்டு*
*தவிக்கிறார் தனிமைப்பட்டு*
*ஆரெனக்கிங்கே உண்டு?*
*அழுகிறார் கண்ணீர் விட்டு*
*ஊரறிய உழைத்து விட்டு*
*உருகுகிறார் துன்பப் பட்டு*
*அரிய உயிர் போனால் விட்டு*
*ஊர் நாய்கள் உண்ணும் எட்டு.*

*- விகடகவி.*

# அரசும் ஐ.தே.கட்சியும் மீண்டும் பேச வேண்டும்

## தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்து

நாட்டின் தேவைகருதி அரசும் ஐ.தே.கட்சியும் மீண்டும் ஒரு தடவை பேச்சு நடத்தி தமக்கிடையிலான முரண்பாடுகளைக் களைய முன்வர வேண்டும்.

- இவ்வாறு நாட்டின் வர்த்தக சமூகத்தை உள்ளடக்கிய தேசிய சமாதானப் பேரவை அரசிடமும் ஐ.தே.கட்சியிடமும் கோரிக்கை விடுத்துள்ளது.

அந்த கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அண்மையில் இரு தரப்புகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களின் போது இணக்கம் காணப்படாத விடயங்கள் குறித்தும், ஏனைய விடயங்கள் குறித்தும் இரு தரப்பும் மீண்டும் ஒரு தடவை பேசி இணக்கத்துக்கு வர முயற்சிக்க வேண்டும்.

காபந்து அரசு அமைப்பது மற்றும் பிரதமர், உப ஜனாதிபதி பதவிகள் என்பன தொடர்பாக இரு தரப்புகளும் நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும்.

அண்மையில் இரு தரப்புகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்கள் தோல்வியில் முடிந்தமையானது நாட்டின் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு இரு தரப்பு ஒத்துழைப்பும் அவசியம் எனக் கருதுவோரைக் கவலை கொள்ளச் செய்துள்ளது.

அதிகாரங்களைப் பகிரும் விடயத்திலேயே இரு தரப்புகளுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே அதனைப் பேசித் தீர்க்க இரு தரப்புகளும் முன்வருவதுடன் விட்டுக் கொடுப்புகளுடன் செயற்படவும் தயாராக இருக்கவேண்டும் - என்றுள்ளது.

(ம-4)

## இலங்கை சுதந்திரத்துடன் இனத்துவம் பறிபோய்விட்டது

# தமிழர்களை சம பிரஜைகளாக அரசு நடத்தும் என்ற நம்பிக்கையை நாங்கள் முற்றாக இழந்துவிட்டோம்

## தென்னாபிரிக்க மாநாட்டில் இமானுவேல் அடிகளார்

கொழும்பு,செப்.3

தமிழர்களை சம பிரஜைகளாக இலங்கை அரசாங்கம் கணிக்கும் என்பதில் எமக்கு இனிமேல் சிறிதளவும் நம்பிக்கை இல்லை. உண்மையையும் நீதியையுமே நாம் வேண்டி நிற்கிறோம்.

தென்னாபிரிக்காவில் டேர்பன் நகரில் நடைபெற்றுவரும் உயர் இனவாத எதிர்ப்பு மாநாட்டில் உரையாற்றிய யாழ்.கத்தோலிக்க ஆயரின் முன்னாள் செயலாளர் ஜோசப் இமானுவேல் அடிகளார் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கையில் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் இனக் கொலை செய்யப்பட்டு வருவதற்கு எதிராக சர்வதேச மனித உரிமை காப்பாளர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்கள் என்றும் அவர் அங்கு எடுத்துரைத்தார்.

இந்தக் கூட்டத்தில் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையத்தின் பிரதிநிதி டியேடர் மெக்கொனல் என்பவரும் கலந்துகொண்டார்.

இமானுவேல் அடிகளார் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

தமிழ் மக்கள் அவர்களது மொழி, கலாசாரம், கல்வி, சமயம், பொருளாதாரம் ஆகியவற்றைப் பொறுத்த அளவில் தினமும் ஒடுக்குமுறைக்கு உள்ளாகிறார்கள்.

பிரித்தானிய குடியேற்றவாத ஆட்சியில் தென்னிலங்கை சிங்கள இராஜ்ஜியங்களில் நாமும் இணைந்திருந்தோம். ஆனால் 50 வருடங்களுக்கு முன் இலங்கை சுதந்திரமடைந்தபோது எங்கள் இனத்துவம் கொள்ளையடிக்கப்பட்டுவிட்டது. 30 வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறை சட்டங்களையும் பாரபட்சங்களையும் எதிர்த்து அமைதிப் போராட்டத்தை நடத்திவந்தோம்.

1983இல் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டதையடுத்தே எமது இளைஞர்கள் அரச பயங்கரவாதத்திலிருந்து தமிழ் மக்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஆயுதம் ஏந்திப்போராட ஆரம்பித்தார்கள்.

அமெரிக்கா, பிரித்தானியா ஆகியனவும் வேறுபல நாடுகளும் இனவேறுபாட்டை அலட்சியம் செய்துவருகின்றன. தமிழ் மக்களுக்கெதிராக முழு அளவிலான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுவருகின்றன - என்றார்.

இக்கூட்டத்தை ஒழுங்கு செய்த தென்னாபிரிக்க தமிழ் இணைப்புக் குழு, தற்போது தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவரும் உலக இனவாத எதிர்ப்பு மாநாட்டில் இலங்கையில் தமிழர்களின் பரிதாப நிலையை எடுத்துவிளக்க இருக்கிறது. (க)

# ஆங்கிலத்தில் விஞ்ஞானபாட போதனை; கொழும்பில் நேர்முகப் பரீட்சை

## எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறும்

ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புக்களில் விஞ்ஞான பாடங்களை ஆங்கில மொழியில் கற்பிப்பதற்காக பட்டதாரி ஆசிரியர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 8ஆம் திகதி சனிக்கிழமை 'இசுருபாய'விலுள்ள கல்விச் சேவை ஆணைக்குழு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த மாதம் 9ஆம் திகதி நடைபெறுவதாக இருந்த இந்த நேர்முகப் பரீட்சை கல்விப் பகுதியினரால் பின்போடப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்தில் இருந்து விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளை எதிர்வரும் 8ஆம் திகதி நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுமாறு கல்விச் சேவை ஆணைக்குழுச் செயலாளர் ரி.எம்.எம். தென்னக்கோன் கடிதம் மூலம் அறிவித்துள்ளார். (க-152)

## நுணாவில் பகுதியில் கூட்டுறவுக் கிளை

கைதடி ப.நோ.கூ. சங்கத்தின் கிளைக் கடையொன்று நுணாவில் பகுதியில் விரைவில் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

(க-117)

## நாளை

ஆவணி 19
செவ்வாய்க்கிழமை
திதி: துதியை
முழுவதும்
நட்சத்திரம் : பூரட்டாதி
பிற்பகல் 1.14 வரை
சுபநேரம்: 10.35 - 12.05
ராகுகாலம் : 3.05 - 4.35
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

நட்புக் கொள்ளும் விடயத்தில் அவசரப்படாதீர்கள். நிதானமாக இருங்கள். நட்புக் கொண்ட பின்பு நிலைத்து நிற்க வழிதேடுங்கள்.

## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



# தமிழர்கள் தலை நிமிர்ந்து வாழ்வதற்கு களத்தில் போராடும் புலிகளே காரணம்

## ஜோசப் எம்.பி. கூறுகின்றார்

மட்டக்களப்பு,செப்.3

உலகெங்கும் வாழும் தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ்வதற்கு களத்தில் போராடும் விடுதலைப் புலிகளே காரணம்.

- இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

தமிழர்கள் இவ்வாறு தலை நிமிர்ந்து நிற்கக் காரணமானது கட்டுநாயக்கா விமான நிலையம் மீது அண்மையில் நடத்தப்பட்ட அதிரடித் தாக்குதலே ஆகும்.

உலக நாடுகளையே அதிசயிக்க வைதததுள்ள இந்தத் தாக்குதல் குறித்து உலக இராணுவப் பாதுகாப்பு நிபுணர்கள் தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

உலகிலேயே ஒரு சில விமான நிலையங்களில்தான் அதிரடித் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன.

அந்தத் தாக்குதல்கள் எல்லாவற்றுக்கும் மேலானது புலிகளின் கட்டுநாயக்காத் தாக்குதல் ஆகும்.

ஸ்ரீலங்காவின் அதி உச்சப் பாதுகாப்பு வலயத்துக்குள் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலின் மூலம் உலகத் தமிழர்கள் அனைவரும் பெருமை அடைவதோடு, நான் தமிழன் என்று தலை நிமிர்ந்து சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். (ம-4)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 22 - 06 - 1917

உதிர்வு 14 - 09 - 2000

### அமரர் ஆறுமுகம் இராசதுரை

திதி: பிரதமை - 03-09-2001

*அன்போடு எம்மையே தாங்கி*
*இதமோடு காத்த உம்மை*
*இழந்ததால் தினமும் நாங்கள்*
*ஆறாத துயரம் கொண்டோம்!*

*குறைவின்றி இறைவன் தொண்டும்*
*இதமாக நீங்கள் பேசும்*
*தொனியும் காதில் கேட்க*
*உமையிழந்து ஓராண்டு*
*ஓடியே மறைந்ததுவோ?*

*சுதுமலை வடக்கு, மானிப்பாய்.*

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். (91843)



## Silver Shield

*தயாரிப்புக்களான*
சொக்ஸ் வகைகள்,
நூல்வகைகள்,
பெனியன்கள்
பலதரப்பட்ட
CURVFORM BRASSIERS
இன்னும்
TRACING PAPER,
PLATE PAPER,
LAMINATING PAPER



*கொழும்பு விலையில் பெற்றுக்கொள்ள:*

**Srimurugan**

303, K.K.S.Road, Jaffna.
Tel:- 021-3588, 2670 Fax:- 3214, email:-del smskr@euraka.lk

*குறிப்பு:- பாடசாலைகளுக்கும் மொத்த வியாபாரிகளுக்கும் விசேட கழிவு வழங்கப்படும்.*
(C/18102)



## ஞானசம்பந்தர் கலைமன்றம்

### கணனிப் பயிற்சிநெறி

எமது மன்றத்தின் கணனிப் பயிற்சிநெறிக்கு புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். பயிற்சி நெறிக்கான விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 09.09.2001 ஆம் திகதிக்கு முன் ஞானசம்பந்தர் கலைமன்றத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**பயிற்சிநெறி விவரம்**
**MS OFFICE 2000**

☆ MS WORD 2000
☆ POWER POINT 2000
☆ MS EXCEL 2000
☆ WINDOW OPERATING SYSTEM
☆ MS ACCESS 2000

*புலோலி கிழக்கு, பருத்தித்துறை.* (C/18051)

- நிர்வாகம், *ஞானசம்பந்தர் கலைமன்றம்.*


## புனர்வாழ்வு முகாம் இளைஞர்களை சந்தித்தார் மாவை

வலி.வடக்கு,செப்.3

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நெல்லிப்பழை புனர்வாழ்வு முகாமில் வைக்கப்பட்டுள்ள இளைஞர்களை கூட்டணியின் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா நேற்றுமுன்தினம் சென்று பார்வையிட்டார்.

- இவருடன் தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர் கு.குலநாயகம், யாழ்.மாவட்ட தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசபாபதி ஆகியோரும் சென்றிருந்தனர். (க-86)

## ஆசிரியர் சங்கம் கோரிக்கை

வடமராட்சி கிழக்கு,செப்.3

ஞாயிறு மற்றும் போயா தினங்களில் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்புகளை நடத்த வேண்டாம் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்மாவட்டத்திலுள்ள 5 வலயக் கல்விப் பணிப்பாளர்களிடமும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது. (ம-182)

## வீதிப் புனரமைப்பு நிறுத்தத்தால் மக்கள் கவலை

சுன்னாகம்,செப்.3

சுன்னாகம் தெற்கு சபாபதிப் பிள்ளை வீதியின் ஒரு சிறுபகுதி திருத்தப்பட்ட நிலையில், புனரமைப்புப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளது குறித்து அப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பல வருடங்களாக திருத்தம் செய்யப்படாமல் குண்டும் குழியுமாகக் காணப்பட்ட இவ்வீதி, வலி. தெற்கு பிரதேச சபையால் புனரமைப்புச் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் வீதியின் சிறுபகுதியை 'கண் துடைப்புக்காக'த் திருத்திவிட்டு, ஏனைய பெரும் பகுதியை திருத்தம் செய்யாது கைவிடப்பட்டுள்ளது குறித்து அப்பகுதி மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

இவ்வீதியை முழுமையாகப் புனரமைத்துத் தருமாறு இப்பகுதிப் பிரதேசசபை உறுப்பினர் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-27)


## தேவை

பெண்களுக்கான ஆடைகள் தைப்பதிலும், கட்டிங் செய்வதிலும் அனுபவம் உள்ள பெண் பிள்ளைகள் தேவை.

N.ஜெகதீஸ்வரன்,
(சீவ் கொமினிக்கேசன்)
முடமாவடிச் சந்தி.
(91823)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

1999 மார்ச் 26 ஆந் திகதி நடைபெற்ற மத்திய அரச தட்டெழுத்தாளர் (தமிழ்) ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் சித்தியடைந்த 44 பேரில் வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தைச் சேர்ந்தோர் 20 பேர் என்பதை அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

இவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் கழகம் மகிழ்ச்சியடைகிறது.

*குறிப்பு:*

**புதிய சுருக்கெழுத்து, தட்டச்சுப் பயிற்சி வகுப்புகள் 14-09-2001 இல் ஆரம்பமாகின்றன. ஆர்வமுடையோர் நேரில் தொடர்பு கொள்ளவும். ஒரு வருட பயிற்சிக்கான மொத்த சேவைக் கட்டணம் ரூபா 350/- மட்டுமே.**

*வதிரி, கரவெட்டி.*

**- வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகம்.** (91789)



## நன்றி கூறுகின்றோம்

தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் யாழ். பிராந்திய ஊழியர்களின் கோரிக்கைகளை ஏற்று ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்து, 45 ஊழியர்களின் வெளி மாவட்ட இடமாற்றம், கட்டாய ஓய்வு என்பனவற்றை உடன் இரத்துச் செய்தமைக்காக,



வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு –கிழக்கு தமிழ் விவகாரங்கள் மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்
மற்றும்



தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைத் தலைவர் **எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா**
அவர்களுக்கும்

*எமது மனமார்ந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

- ஊழியர்கள், வடபிராந்திய தொழிற்சங்கம்,
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை,
யாழ்ப்பாணம்.

(91797)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 - 04 - 1932



மறைவு 14 - 09 - 2000

### திருமதி சிவபாக்கியம் கந்தையா

திதி: 03.09.2001

எமது அன்புத் தாயே!
எம் குடும்ப ஒளி விளக்கே!
உயர்வு காண்பதற்கே
ஓயாது உழைத்த அன்னையே!
அப்பாவைப் பிரிந்த எமக்கு
ஆறுதல் நீ தந்தாயே!
தாயும் தந்தையுமாய்
எம்மை அணைத்த தெய்வமே!
உன் பிரிவால் வாடுகின்றோம்
ஆறுதல் கூற யாருமில்லையம்மா!
ஆண்டு ஒன்று உருண்டோடி விட்டதே!
ஆறவில்லை எம் துயரம்
மீளவில்லை உம் நினைவிலிருந்து.

*அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.* (91822)

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



## நிப்பொன் (NIPPON)

குளிர் / சூடான நீர் வழங்கி

**Hot & Cold Water Dispenser**

*சூடான தேநீர், கோப்பி மற்றும் குளிர்பானங்களை இலகுவில் தயாரிக்கலாம்*

**Light Duty வகை**
* இலகுவானதும் கவர்ச்சிகரமானதும்
* 3 கலன் நீர் கொள்கலனுடன் கூடியது.
* அலுவலகம், வீடுகளில் பாவிக்கக் கூடியது
* எவ்வேளையிலும் குளிர் / சூடான நீரை பெறமுடியும்
* வெப்பநிலை மாற்றிக் கொள்ள கூடியது

**Heavy Duty வகை**
* ஜப்பானிய Compressor
* பொது இடங்கள் அலுவலகம் மற்றும் வீடுகளில் பாவிக்கக் கூடியது.



**LANKA NIPPON**

No.18, Keyzer St. Colombo-11.Tel:437735.
No.10, Trelawny Place, (Behind Milk Bar), BambalapitiyaJunc,Colombo-04.Tel:589992.

நிப்பொன் உத்தரவாதமுள்ள தயாரிப்புகள்

# தான் வைத்த பொறியில் சிக்குண்டு திணறுகிறார் ஜனாதிபதி சந்திரிகா

**தற்போதுள்ள அரசியல் குழப்பங்களுக்கும், அரசுக்கும் எதிரான எதிர்ப்பு அதிகரித்துவருவதற்கும் ஜனாதிபதியே பொறுப்பு. அவர் வைத்த பொறியில் அவரே அகப்பட்டுத் தவிக்கும் நிலை குறித்து அரசியல் விமர்சனத்தில் ஆராய்கிறது 'ராவய' சிங்கள வாரஇதழ். அதன் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

**மிக** ஆழமான குழியில் வீழ்ந்த ஒருவர் அந்தக் குழியில் இருந்து மேலே ஏறுவதற்கு எடுத்த சகல முயற்சிகளும் தோல்வியடைந்த பின்னர், அந்தக் குழியின் அடித்தளத்தில் இருந்து குகை போன்று நிலத்தை அகழ்ந்து வெளியேறும் முயற்சிக்கு ஒப்பான நிலையில் இன்று ஜனாதிபதி உள்ளார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறை மிகவும் பலம் வாய்ந்த பதவியாயினும், அந்தப் பலமானது நாடாளுமன்றத்தில் ஆளுங்கட்சிக்கு (ஜனாதிபதிக்கு) உள்ள பெரும்பான்மையிலேயே தங்கியுள்ளது. ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஜனாதிபதியாகப் பணியாற்றிய போது அவருக்கு நாடாளுமன்றத்தில் ஆறில் ஐந்து பெரும்பான்மை இருந்தது. பிரேமதாசா ஜனாதிபதியாகப் பணியாற்றிய போது நாடாளுமன்றத்தில் ஆறில் ஐந்து பெரும்பான்மையில்லாத போதும், பிரச்சினைகள் இன்றி ஆட்சி நடத்துவதற்குத் தேவையான பெரும்பான்மை நாடாளுமன்றத்தில் இருந்தது. இருப்பினும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை மிக மிகச் சொற்பமாய் இருப்பினும் அவர் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஆட்சி செய்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தானும் மேற்கொள்ளப் போய் சிக்கல்களில் மாட்டிக் கொண்டார்.

ஜனாதிபதி சந்திரிகா தனக்குக் கிடைத்த வெற்றியை பொதுமக்களின் ஆதரவால் கிடைத்த வெற்றி எனக் கருதாமல், தனக்குச் சொந்த முறையில் கிடைத்த வெற்றி எனக் கருதுகிறார்.

### அரசுக்குள் இரகசியக் குழுக்கள்

ஜனாதிபதி தன்னுடன் ஒட்டி உறவாடுபவர்களை - தான் செய்யும் அனைத்துச் செயல்களையும் சரி பிழை கருதாது அப்படியே ஏற்றுக் கொள்ளுபவர்களைத் தவிர வேறு எவரையும் நம்புவதில்லை. தன்னைத் தவிர ஏனைய அனைவரையும் எள்ளி நகையாடுவதுடன் 'அவர்கள் யார்?' என்ற மனப்போக்கில் செயற்பட்டு வருகிறார்.

ஜனாதிபதியால் ஏளனம் செய்யப்பட்டவர்கள் - அவமானப்படுத்தப் பட்டவர்கள் ஜனாதிபதிக்கு மறக்க முடியாத பாடத்தைப் புகட்டும் நோக்கில் அரசிற்குள்ளேயே இரகசியமான குழுக்களை அமைத்து செயற்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

முஸ்லிம் காங்கிரஸ், எதிர்க்கட்சிகளுடன் இணைந்து நாடாளுமன்றத்தில் அரசு பெரும்பான்மையை இழக்கும் நிலை உருவானபோது ஜனாதிபதிக்கு எதிராக அரசிற்குள்ளேயே அமைப்பு ரீதியாக மோதும் நிலை உருவான போதிலும் அது குறித்து ஜனாதிபதி புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. அமைச்சர்கள் பலர் ஜனாதிபதியின் ஏச்சுகளுக்கும் பேச்சுகளுக்கும் உட்பட்ட போதிலும், தான் அழைக்கும்போது அனைத்தையும் மறந்து அலைபோல் திரண்டு வந்து தனக்காக அந்த அமைச்சர்கள் குரல் எழுப்புவர் என்றே ஜனாதிபதி நம்பியிருந்தார்.

தனக்குத்தானே உருவாக்கிய மீள முடியாத பொறியில் தான் சிக்கியுள்ளார் என்பதை ஜனாதிபதியால் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்தப் பொறியிலிருந்து விடுபடுவதற்கு ஒரேயொருவழி மாத்திரமே உள்ளது. அதாவது நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெற்றிருக்கும் எதிர்க்கட்சிகளுக்கு ஆட்சி அமைக்க வாய்ப்பளித்து - தனக்கு எதிராக நாடாளுமன்றத்தில் அரங்கேறவுள்ள நிகழ்ச்சிகளைப் புரிந்து கொண்டு - அவ்வாறான நிகழ்வுகள் இடம்பெற வாய்ப்பளிக்காது ஜனாதிபதி பதவியில் இருந்து விலகுவதே அந்த ஒரேயொரு வழியாகும். இவை அனைத்தும் இவ்வாறு இடம்பெற்றால், சந்திரிகா குமாரதுங்க அம்மையார் ஜனாதிபதி பதவியை இழக்க நேரிட்டாலும் மக்களின் நிந்தனைக்கு உள்ளாகும் நிலை உருவாகாது. இருப்பினும் ஜனாதிபதி இவற்றிற்குப் பதிலாகத் தான் அகப்பட்டுக் கொண்டிருக்கும் பொறியை மேலும் மேலும் இறுக்கிக் கொண்டிருக்கிறார். பொறியின் சுபாவத்தின்படி அது இறுக்கப்பட்ட பின்னர் அது மேலும் இறுகுமே தவிர அதிலிருந்து தப்புவதற்கு வாய்ப்புக்களே இல்லை.

ஜனாதிபதி நாடாளுமன்றத்தின் செயலமர்வை ஒத்திவைத்ததன் மூலம் உருவாகியுள்ள சிக்கல்கள் மிகுந்த முடிச்சுக்களை அவிழ்க்க கால அவகாசத்தை எதிர்பார்த்தார். அந்த முடிச்சுக்கள் சுலபமானவை அல்ல. எதிர்கட்சிகள் மீது குற்றங்களைச் சுமத்திக் கொண்டிருக்கையில் உள்கட்சிப் பிரச்சினைகளும் உருவாகியுள்ளன. நாடாளுமன்றத்தை ஒத்திவைத்த செயலானது உள்கட்சிப் பூசல்களுக்கு உரமிட்டது.

தான் பல திசைகளாலும் சுற்றி வளைக்கப்பட்டுள்ளதாகவும் தனக்காக அதுவரை செயற்பட்ட தலைவர்களில் பலர், ஒன்றில் உள்கட்சிப் பூசலில் ஈடுபட்டுள்ளனர் அல்லது பேசாமடந்தைகளாகியுள்ளனர் என்ற நிலை உருவாகியுள்ளதை ஜனாதிபதி அறிந்தபோது தப்புவதற்கு வழியேதுமில்லாமல் தவிக்கவிடப்பட்டுள்ளார்.

தற்போது தானே வைத்த பொறியில தானே அகப்பட்டுள்ளதை ஜனாதிபதி உணர்கிறார். அதேபோல் அதில இருந்து விடுபடுவதற்கு மார்க்கமேதும் இல்லை என்பதையும் அவர் அறிந்துள்ளார்.

**தமிழில் : கஜனி**

நாடாளுமன்றத்தை செப்ரெம்பர் 7ஆம் திகதி மீண்டும் கூட்டி அரசை அமைப்பதற்கு எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்பளித்தாலும் உள்கட்சிப் பிரச்சினையில் ஈடுபட்டுள்ள முக்கியஸ்தர்கள் புதிதாக அமைக்கப்படவுள்ள அரசில் பங்காளிகளாக வர வாய்ப்புக்கள் உள்ள நிலையில், அந்த முக்கியஸ்தர்கள் தனக்கு எதிராகக் கடும்போக்கைக் கடைப்பிடிக்கலாம்



என்பதையும் ஜனாதிபதி அறிவார்.

நாடாளுமன்றத்தின் செயலமர்வை மீண்டும் ஒத்திவைத்து, எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் நாடாளுமன்றத்தைக் கலைத்து, மீண்டும் தேர்தலை நடத்தினாலும், பொ.ஐ.முன்னணி படுதோல்வி அடைவதைத் தவிர்க்க முடியாது. அவ்வாறான வேளையில் வெற்றிக்களிப்பில் மக்கள் வலுப்பெற்று தனக்கு எதிராக எழுவார்கள் என்பதையும் ஜனாதிபதி அறிவார்.

இவ்வாறான பின்னணியில் ஜனாதிபதி மேற்கொள்ளக் கூடிய - நல்ல நடவடிக்கை யாதெனில் செப்ரெம்பர் 7ஆம் திகதி நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டி எதிர்க்கட்சிகள் தாங்கள் விரும்பும் ஓர் அரசை உருவாக்குவதற்கு வாய்ப்பளித்துவிட்டு - தனது ஜனாதிபதிப் பதவியையும் கைவிடுவதே ஆகும்.

அவ்வாறு செயற்படாது தொடர்ந்தும் பதவியைத் தக்கவைத்து, தான்தோன்றித்தனமாகச் செயற்படமுற்பட்டால் மக்கள் சக்தியின்மூலம் அவரைப் பதவியில் இருந்து அகற்றும் நிலைமை உருவாகும். அத்தகைய நிலைமை சுயவிருப்பத்தின் பேரில் பதவியைத் துறப்பதை விட மேன்மையானதாகவோ கௌரவமானதாகவோ அமையாது. ★

---

# தமிழர்களை நேசித்த 'தர்மர்'

**தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூத்த பிரமுகரும், உடுவில், மானிப்பாய் தொகுதிகளின முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய அமரர் விஸ்வநாதர் தர்மலிங்கத்தின் 16ஆவது சிரார்த்த தினம் நேற்றாகும். அதனை ஒட்டி இந்நினைவுக் குறிப்பு வெளியாகின்றது.**

**த**மிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரும் உடுவில், மானிப்பாய்த் தொகுதிகளின் நாடாளுமன்ற உறுப்பினராக இருபத்து மூன்று வருடங்கள் பதவி வகித்து மக்களின் இதயங்களில் நீங்காத இடத்தைப்பெற்றவருமான, அமரர் விஸ்வநாதர் தர்மலிங்கம் அவர்களின் பதினாறாவது சிரார்த்த தினம் நேற்றாகும். 'இலங்கையர்' என்றும் 'தர்மர்' என்றும் எல்லோராலும் செல்லமாக அழைக்கப்படும் இவர் விஸ்வநாதர் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளுக்கு அவரின் தாயாரின் ஊராகிய இருபாலையில் 05.12.1918 ஆம் ஆண்டு பிறந்தார். சில வருடங்களின் பின்பு தனது தந்தையாரின் ஊராகிய கந்தரோடையில் தனது பெற்றோருடன் வந்திருந்து, தனது ஆரம்பக்கல்வியை கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் ஆரம்பித்தார். மிகவும் செல்வம் நிறைந்த குடும்பத்தில் பிறந்த தர்மலிங்கத்துக்கு வேறு சகோதரர்கள் இல்லாத நிலையில் ஏக புத்திரராக இருந்தார். இவரின் பெரிய தந்தையும், கொடைவள்ளலுமாகிய டாக்டர் சுப்பிரமணியம் (பி.எஸ்.) என்பவருக்கு புத்திரபாக்கியம் இல்லாதபடியினால் 'தர்மர்' அவர்களைத் தனது பிள்ளை போல கருதி அவரின் அரவணைப்பிலும் வளர்ந்தார்.

தனது ஆரம்பக்கல்வியை முடித்துவிட்டு சிலகாலம் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தார். அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் புகழ்பூத்த கல்லூரியாக யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி விளங்கியது. அப்பொழுது அங்கு வணபிதா லோங் (Rev.Father Long) என்ற அதிபர் அங்கு கடமையாற்றினார். தர்மரின் பெற்றோர் அவரை அக்கல்லூரியில் சேர்த்தனர். அவர் அங்கே தனது உயர்கல்வியைப் பூர்த்தி செய்த பின்பு, இலங்கைச் சட்டக் கல்லூரியில் சேர்ந்து சட்டக் கல்லூரி மாணவனாக இருந்தார். அந்நேரத்தில தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் காலஞ்சென்ற அ.அமிர்தலிங்கம் இவருடன் சக மாணவனாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே தனது நெருங்கிய உறவினரான வேலும்மயிலும் தம்பதிகளின் மகள் கமலாம்பிகையை திருமணம் செய்து சித்திரலேகா, சித்தார்த்தன் என இரு செல்வங்களையும் பெற்றிருந்தார். தர்மர் சட்டக் கல்லூரியில் படிக்கும் காலத்தில் இவரின் அன்பு மனைவி கமலாம்பிகை இரு செல்வங்களையும் தவிக்கவிட்டு இறைவனடி சேர்ந்தார். இந்தப் பேரிழப்பைத் தாங்கமுடியாத 'தர்மர்' தனது சட்டக்கல்விக்கு முழுக்குப் போட்டுவிட்டுத் தனது சொந்தக் கிராமமான கந்தரோடைக்கு வந்து; அங்கு தனது செல்வங்களுடன் இருந்தார். சில வருடங்கள் செல்ல தனது மனைவியின் சகோதரியான சரஸ்வதியைப் பெரியோர்களின் விருப்பத்திற்கிணங்க 1952 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார்.

**ஆ.சி.கணேசவேல்**

பின்பு 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்று கருதி உள்ளூராட்சி அரசியலில் ஈடுபட்டு, உடுவில கிராம சபையின் கந்தரோடை வட்டார அங்கத்தவராகவும், பின்பு உடுவில் கிராம சபைத் தலைவராகவும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். அப்பொழுது அவரின் வலது கரமாக இருந்தவர் க.முத்துலிங்கம். இவர் பின்பு கிராம சபைத் தலைவராக இருந்தவர்.

தர்மர் சட்டக் கல்லூரியில் படிக்கும் காலத்தில் அமரர் அ.அமிர்தலிங்கத்துடன் சேர்ந்து தமிழ் மன்றத்தை உருவாக்கி தமிழுணர்ச்சி மிக்கவராகத் திகழ்ந்தார். 1960ஆம் ஆண்டு உடுவில் தொகுதி புதிதாக உருவாக்கப்பட்டது. இத்தொகுதியில் தந்தை செல்வாவின் வேண்டுதலின் பேரில் இலங்கைத் தமிழரசுக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு அமோக வெற்றியீட்டினார். அன்றிலிருந்து 1983ஆம் ஆண்டு வரை அதாவது தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவி துறக்கும் வரை உடுவில், மானிப்பாய்த் தொகுதிகளின் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவிவகித்தார்.

தமது அன்பாலும், பண்பாலும், இன்சொற்களாலும், தன்னலமற்ற சேவையாலும், கொள்கைப் பற்றாலும் மக்களின் இதயங்களில் நீங்காத இடத்தைப்பெற்ற உத்தமராகத் திகழ்ந்தவர். பொதுவுடைமைக் கொள்கைகளிலும் அப்போதிருந்த சோவியத் ரஷ்யாவின் பொருளாதாரத் திட்டங்களிலும் அதிக நாட்டங் கொண்ட இவர், நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் உலகின் பல நாடுகளில் காலத்துக்குக் காலம் நடைபெற்ற மகாநாடுகளில் தேசிய உடையில் பங்குபற்றி, இலங்கைத் தமிழ் மக்கள் படும் இன்னல்களை உலகறியச் செய்தவர். 1972ஆம் ஆண்டுக்குப் பின்பு இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொரடாவாக இயங்கி, சிறையில் அடைக்கப்பட்ட இளைஞர்களுக்காக நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்தது மாத்திரமன்றி சர்வதேச மன்னிப்புச் சபையினருடன் தொடர்புகொண்டு இளைஞர்களின் விடுதலைக்காக உழைத்தவர்.

அரசியலில் மாத்திரமன்றி சமய, சமூகப் பணிகளிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர். பல வருடங்கள் தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தானத்தின் அறங்காவல் குழுத்தலைவராகவும் இருந்தவர். அவருக்கு எதிரிகள் எவருமே இல்லையெனலாம். தனது புன்சிரிப்பாலும், இனிய பேச்சாலும் எல்லோரின் அன்பைப் பெற்றிருந்த 'தர்மர்' 02-09-1985 அன்று துப்பாக்கியினால் சுடப்பட்டு மரணமானார் என்பதை நினைக்கும் போது யார்தான் வேதனையடைய மாட்டார்கள். ★

---

# கவிமணி தேசிக விநாயகம்பிள்ளையின் கவிதை மணிகள் பலவற்றுள் ஒரு மணி

**இலக்கியச் சோலை**

கவிமணி தேசியவிநாயகம்பிள்ளை அவர்களின் பாடல்கள் அனைத்திலும் தமிழ் மொழியின் அழகைக் காணலாம். அவருடைய பாடல்கள் அனைத்தும் மலையில் இருந்து குதித்தோடும் அருவியைப் போலத் தங்கு தடையின்றி அழகுறச் செல்வன. எந்த விஷயத்தை எந்த யாப்பில் சொன்னால் எடுபடும் என்ற வித்தையை அவர் நன்கு தெரிவித்திருந்தார். உமார்கையாம் பாடல்களை அறுசீர் விருத்தத்திற்பாம அந்த விஷயத்துக்கு அறுசீர் விருத்தமே பொருத்தம் என்பதை நிருபித்தார்.

அவர் பலரையும் பலசந்தர்ப்பங்களிலும் வாழ்த்திப்பாடி இருக்கிறார். அப்படி வாழ்த்திப் பாடுவதற்குப் பெரும்பாலும் வெண்பா யாப்பையே கையாண்டிருக்கிறார். காலத்துக்குகேற்ற எளிமை தோன்றவும், கருத்துச்செறிவு சிறந்தது தோன்றவும் வெண்பாவைப் பாடுவது கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளைக்குச் சிரமமான ஒன்றாக இல்லாமல் இயல்பான ஒன்றாக அமைந்தது.

வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார் என்பவர் தமிழ்ப் பேரறிஞர். "அகலிகை வெண்பா" என்ற கவிதை நூல் மூலம் பெரும்புகழ்பெற்றவர். இலக்கண இலக்கியத்தில் ஆழ்ந்த புலமை உடையவர். அவரது எண்பதாவது ஆண்டு நிறைவைத் தமிழ் நாட்டின் பெருவிழாவாகக் கொண்டாடினார்கள். பலர் அவரது எண்பதாவது ஆண்டு நிறைவை வாழ்த்திப் பாடினர். கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளையும் அவரை வாழ்த்தி ஒரு வெண்பா பாடினார். கவிமணியின் பாடலே அனைத்துப் பாடல்களையும் விஞ்சி நின்றது.

இதோ அந்தப் பாடல்!

*எண்பதாண்டான இளைஞனே! இன்னமுதின்*
*பண்பெலாம் காட்டு தமிழ்ப்பாவலனே! - நண்பனே!*
*வெள்ளகால் செல்வனே! வேள் சுப்பிரமணிய*
*வள்ளலே! வாழ்க மகிழ்ந்து!*

ஒருவருடைய பிறந்தநாள் வாழ்த்தாக அமையும் பாடல் அவருக்குத் தன்னம்பிக்கையை ஊட்டவேண்டும். அவர் செய்யும் பணியை அவரால் மேலும் தொடர்ந்து சிறப்பாகச் செய்ய முடியும் என்று உற்சாகப்படுத்த வேண்டும். அவருடைய பணியைப் பெருமைப்படுத்த வேண்டும். அவர் நீண்டகாலம் மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என வாழ்த்த வேண்டும்.

**சந்திரமௌலி**

கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளையின் இந்த வெண்பாவை ஓசை நயத்துக்காக ஒருமுறை படிக்கலாம். எளிமைக்காக இன்னும் ஒரு முறை படிக்கலாம். பொருள் அமைதிக்காகப் பலமுறை படிக்கலாம்.

எண்பதாண்டு நிறைந்த ஒருவரைப் பார்த்து எண்பதாண்டான இளைஞனே! என்று விளித்தது அவருக்கு உள இயல்ரீதியாக நம்பிக்கையை ஊட்டுகிறது. இன்னமுதின் பண்பெல்லாம் காட்டு தமிழ்ப் பாவலனே! என்றது இன்னமுதின் பண்பைக் காட்டும் பாடற் பணி மேலும் தொடரட்டும் என ஊக்கம் கொடுக்கிறது. 'வள்ளலே வாழ்க மகிழ்ந்து' என்ற ஈற்றடி இன்னும் நீண்டகாலம் வாழ இருக்கும் நீ மகிழ்ச்சியை மட்டுமே வாழ்வில் காண்பாயாக, என வாழ்த்துகிறது.

பாடலிற் பாடியவரின் உள்ளத்தையும் காணலாம். பாடப்பெற்றவரின் சிறப்பையும் காணலாம். வெண்பாவின் அழகையும் காணலாம்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## ஆனந்த வெளியீடுகள்

பொது அறிவு, அழகியல், கந்த சஷ்டி கவசங்கள், வியாழமாற்றம், ஆங்கிலத்தில் கட்டுரைகள் எங்கும் விற்பனையாகின்றன. V.A.சிவராசா வெளியிட்டது என்று கேட்டு வாங்குங் கள். 152B, அரசடி வீதி, கந்தர்மடம். (91819)

## வீடற்றவன்

சி.வி.வேலுப்பிள்ளையின் வீடற்ற வன் நாவலின் விளக்கமும் விமர் சனமும். ஆக்கம்: அராலியூர் ந.சுந்தரம பிள்ளை. க.பொ.த. சாதாரணதர மாண வர்களுக்கு தமிழ் இலக்கியம் கற்கப் பயன்படும். 50 பக்கங்கள். விலை ரூபா 25/=. (91749)

## காணி விற்பனைக்கு

இல.14, மாட்டீன் வீதியில் உள்ள அரிசி ஆலைக்கு எதிர்ப்புறத்தில் கஸ் பெஸன் அச்சகத்துக்கு அருகில் அமைந்துள்ள 2பரப்புக் காணி விற் பனைக்கு உண்டு. தொடர்பு:- 69, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். (91809)

பருத்தித்துறை வீதியிலுள்ள ஆனைப்பந்தி சந்திக்கு மிக அண்மை யில் அமைந்துள்ள இரண்டு வீடுகளும் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு. தினமும் 8 - 5 மணிவரை தொடர்புகொள்ளலாம். ஜெ.பொன்னுத துரை, 61/2, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (91812)

## தட்டச்சு வகுப்புகள்

தமிழ் தட்டெழுத்து, சுருக் கெழுத்து, ஆங்கில தட்டெழுத்து வகுப்புகள். ஆரம்பம்: 5.9.2001. தொடர்பு:- 5,அம்மன் வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம். (91774)

## வீடு விற்பனைக்கு

கே.கே.எஸ். வீதி, தட்டாதெருச் சந்திக்கு அருகில் சகல வசதிகளு டன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: ச.தங்கராசா, 953, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (91798)

## காணாமற் போய்விட்டது

கடந்த 31.08.2001 வெள்ளிக்கிழமை றான் அலுவலகத்துக்கு முன்பாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த பெண் களுக்கான லுமாலா சைக்கிள் (இல. 56040551) காணாமற்போய்விட்டது. இதுபற்றித் தகவல் தெரிந்தவர்கள் சி.துரைசிங்கம், அம்பாள் கோயிலடி, மாதகல் என்னும் முகவரிக்கு அறியத் தரவும். சன்மானம் வழங்கப்படும். (91830)

## விற்பனைக்கு

வீட்டுப் பாவனைக்குரிய குளிர் சாதனப் பெட்டி 'சிசில்' விற்பனைக்கு உண்டு. விலை 10,000/=. தொடர்பு: S.ரஞ்சித், இல. 54, 3ஆம்குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (91810)

EXHAUST FAN (17.5 அங்குலம்) (உஷ்ணத்தை வடியப் பண்ணும் மின விசிறி), 230 வோல்ட், 50 HZ Single Phase A.C, 1400 RPM (ஒரு நிமிடத் துக்கு 1400 சுழற்சி) 370 Watts. விற் பனைக்கு உண்டு. தொடர்பு: S.ரஞ்சித், இல. 54, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (91811)

## மணமகன் தேவை

1969இல் பிறந்த, கார்த்திகை முத லாம் பாதம் ஆசிரியைக்கு அரச தொழில், வியாபாரம் செய்யும் படித்த மணமகன் தேவை. தொடர்பு: 676, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (91845)

## வாடகைக்கு

நகரின் மத்தியில் கடையும், அலு வலகங்களுக்கு ஏற்ற வகையில் மேல் மாடியும் வாடகைக்கு உண்டு. தொடர்பு களுக்கு:- 303, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C-18109)

## தவறிவிட்டது

251, பருத்தித்துறை வீதி, நல்லூ ரைச் சேர்ந்த நிரஞ்சனா பத்மநாதன் என்பவரது விசேட அ.அ.(இல. 0902032286) தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள் பேயர் ஹவுஸ், ஆஸ்பத்திரி வீதி எனும் முகவரியில் ஒப்படைக் கவும். (91850)


## மோட்டார் வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான மருத்துவச் சான்றிதழ் வழங்கலும் சகல நோய்களுக்குமான வைத்திய நிபுணர்களின் ஆலோசனையும்

மோட்டார் போக்குவரத்துப் பகுதி விதிகளுக்கு அமைவான சான்றிதழ் பதிவுசெய்யப்பட்ட MBBS வைத்திய நிபுணர்களால் உடனுக்குடன் வழங்கப்படுகிறது.

யாழ். பிரபல வைத்திய நிபுணர்களின் சகல நோய்களுக்குமான ஆலோசனையும் வழங்கப்படுகிறது.

- கண்வைத்திய ஆலோசனையும் சத்திரசிகிச்சையும்,
- தோல் சிகிச்சை ஆலோசனைகள்,
- பொது வைத்திய ஆலோசனைகள்,
- பல் வைத்திய ஆலோசனைகள்,
- மகப்பேறு, பெண்ணியல் நோய் பற்றிய ஆலோசனைகள்,
- காது, மூக்கு, தொண்டை பற்றிய வைத்திய ஆலோசனையும், சத்திர சிகிச்சையும்,
- காது கிளீன் செய்தல், காது, மூக்கு முதலியவற்றின் உட்சென்ற பொருள்களை எடுக்கும் வசதிகள்.

**E.N.T & மெடிக்கல் கிளினிக்,**

இல.24, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். பஸ்நிலைய முன் ஒழுங்கை, H.N.B அருகில்) (91851)


## சென்.ஜோன் அம்புலன்ஸ் சின்னத்தைப் பொறுப்பற்றவர்கள் பயன்படுத்துதல் தண்டனைக்குரிய விடயம்

சென்.ஜோன் அம்புலன்ஸ் யாழ். தெற்குப் பிரதேசம் யாழ்ப்பாணம், நல்லூர், தீவக உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளை உள்ளடங்கும். இதன் மாவட்ட ஆணையாளராக செ.செல்வரஞ்சன், (Warrant of Appointment No. SJ/ NHQ/WA/129) உதவி மாவட்ட ஆணையாளர் தீவகம் இ.அசோகன் (W. A. No. SJ/ NHQ/WA/273) ஆகியோரை இப்பகுதியின் பொறுப்பான பதவிக்கு சென்.ஜோன் அம்பு லன்ஸின் தளபதி Dr.J.G. ஜெயதிலகா அவர்களினால் நியமிக்கப்பட்டு, செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இப்பகுதியில் ஒரு தனிப்பட்ட நபர் இச் சின்னத்தைப் பயன்படுத்தி வருவதாக எமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. இவ்வாறு அந்நபர் சின்னத்தைப் பயன்படுத்துவது சென்.ஜோன் அம்புலன்ஸின் பொதுவிதி 39ஆம் பக்கம் 77ஆம் பந்தி யின் பிரகாரம் தண்டனைக்குரிய விடயமாகும்.

எமக்கு ஒதுக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட பிரதேசத்தில் எம் இருவரைத் தவிர வேறு எவராவது இத்தகைய முறையில் நடந்துகொண்டால் அதற்கு ஒத்துழையாது உடன் எமது கவனத்திற்கு அறியத்தந்து உதவுமாறு அரச அதிகாரிகள், கல்வித்திணைக்கள அதிகாரிகள், பொதுமக்கள் ஆகியோரைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

செ.செல்வரஞ்சன் SB.ST.J
மாவட்ட ஆணையாளர்,
யாழ். தெற்குப் பிரதேசம்.

இ.அசோகன்
உதவி மாவட்ட ஆணையாளர், தீவகம்.

*சென்.ஜோன் அம்புலன்ஸ், யாழ். தெற்குப் பிரதேசம், பிரதேச தலைமையகம், கொக்குவில்.* (91849)

## கண்ணீர் அஞ்சலி

உயர்திரு.
**க.சி.தருமலிங்கம் அவர்கள்**
(ஓய்வுபெற்ற அதிபர்)

நயினை ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான முன்னாள் தலைவரும், போசகரும், ஓய்வுபெற்ற அதிபருமாகிய க.சி.தருமலிங்கம் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

பரிபாலன சபை
ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தானம்,
நயினாதீவு - 06.
(91847)

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1928 - 07 - 24



உதிர்வு 1990 - 09 - 03

**அமரர் E.K.குமரையா**

அன்பின் பிணைப்புகள் - அழியாது
அகிலத்தில் என்றென்றும்!

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
- குடும்பத்தினர்.

*99/6, "சந்தனமாதா கோயில் ஒழுங்கை, கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம்.* (91844)

# கல்விச்சாலைக் காட்சிகள்



கொக்குவில் சங்கீர்தா பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

இவ்விழாவின் சிறப்பு விருந்தினர்களில் ஒருவரான கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் பொ.கமலநாதன் பல நிகழ்வுகளில் முதலிடம்பெற்ற செல்வன் பாலச்சந்திரன் விதுர்சனுக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில்காணலாம். (க-7)



நவாலி குடும்பப் பாடசாலைகளின் சிறுவர்களுக்கான விளையாட்டுவிழா அண்மையில் நடைபெற்றது.

விளையாட்டுவிழாவில் மாணவர்கள் சத்தியப்பிரமாணம் செய்து கொள்வதையும், விருந்தினர்களாகக் கலந்துகொண்ட வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வி.இராசையா, சண்டிலிப்பாய் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம், குடும்பப் பாடசாலைகளின் தலைவர் சிறில்.சுகந்தரன் ஆகியோர் அதனை அவதானிப்பதையும் படத்தில் காணலாம். (க-4)



நல்லூர் ஞானக்குழந்தை முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கம், சிறப்பு விருந்தினர்களான தி.ஸ்ரீஸ்கந்தராசா, இ.தவகோபால், டாக்டர் வி.வேதநாதன் ஆகியோர் வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம். (க-7)



"புது யுகத்துக்கு வழிகாட்டல்" என்னும் பொருளில் வல்வை சிவகுரு வித்தியாசாலையில் அண்மையில் மாணவர், ஆசிரியரின் ஆக்கக் கண்காட்சி ஒன்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சிக் கல்விவலய கணிதபாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தியாகராசா மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் சிறப்புவிருந்தினரான வடமராட்சி வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் க.கமலானந்தன், பாடசாலை அதிபர் த.தவேந்திரராசா ஆகியோர் காணப்படுகின்றனர். (க-7)

## மட்டக்களப்பு மாவட்டத்தில்

# புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் அபிவிருத்திப் பணிகளை நிறுத்துங்கள்!

## ஜனாதிபதியிடம் படை அதிகாரிகள் கோரிக்கை

மட்டக்களப்பு, செப். 3

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அரச திணைக்களங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்திட்டங்களை இடைநிறுத்துமாறு மட்டு.மாவட்ட பாதுகாப்புப் படை அதிகாரிகள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டப் படை அதிகாரி ஒருவர் செய்தி ஊடகம் ஒன்றுக்கு இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த வருடம் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு இடையூறு விளைவிப்பதில்லை என்றும், வாகனக் கடத்தல், ஆள் கடத்தல் என்பவற்றில் ஈடுபடப்போவதில்லை என்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் அறிவித்திருந்தனர்.

ஆனால் கடந்த மாதம் 20 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிர பிரதேசமான அம்பினாந் துறையில் வைத்து சேவாலங்கா என்ற அரச சார்பற்ற நிறுவனத்தின் 'லான்ட் குறூசா' வாகனம் கடத்தப்பட்டதுடன் கடந்த சில தினங்களாக தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டும் வருகின்றனர்.

இதனால் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொள்ளமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக படை அதிகாரிகள் ஜனாதிபதியிடம் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதியின் அங்கீகாரம் கிடைத்ததும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு எந்நேரமும் தடைவிதிக்கப்படலாம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்

இதேவேளை —

மட்டக்களப்பு மாவட்டத்தில் 24 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்ட மண்முனை மேற்கு, 43 கிராமசேவகர் பிரிவுகளைக் கொண்ட போரதீவுப்பற்று, 24 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்ட பட்டிப்பளை என்பன முற்றுமுழுதாகக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளன.

ஏறாவூர்பற்று பிரதேசத்தில் செங்கலத — பதுளை வீதியிலுள்ள 11 கிராம சேவகர் பிரிவுகளும் வாழைச்சேனைப் பிரதேசத்திலுள்ள 11 கிராமசேவகர் பிரிவுகளும், வாகரை பிரதேசத்திலுள்ள 10 கிராம சேவகர் பிரிவுகளும், ஓட்டமாவடிப் பிரதேசத்திலுள்ள ஒரு பிரிவும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ளன.

ஏறாவூர் நகரம், மண்முனை வடக்கு, காத்தான்குடி, ஆரையம்பதி, களுவாஞ்சிக்குடி ஆகிய ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளே முற்றுமுழுதாக படையினரின் கட்டுப்பாட்டிலுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 345 கிராம சேவகர் பிரிவுகளில் 123 பிரிவுகள் கட்டுப்பாட்டில்லாத பிரதேசங்கள் உள்ளதால் இந்த அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்வது இடைநிறுத்தப்படலாமென அஞ்சப்படுகிறது (க-7)

## செயலமர்வுகளைத் தொடருமாறு அறிவுறுத்தல்

குருநகர், செப். 3

ஜீ.ஈ.பி. 2 கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தரம் 8, 11 வகுப்புகளில் உள்ள ஆசிரியர்களுக்கு வடக்குக் கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட குறிப்பிட்ட பாடங்களுக்கான செயலமர்வுகளை தொடர்ந்து நடத்துமாறு தேசிய கல்வி நிறுவனம் சுற்றுநிருபம் மூலம் அறிவுறுத்தியுள்ளது.

(க-51)

## சைவப் பிரசங்க பூர்த்தி விழா

யாழ்ப்பாணம், செப். 3

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலயத்தின் மகோற்சவ காலத்தில் நடைபெற்று வந்த சைவப்பிரசங்கப் பூர்த்தி விழா இன்று மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

தொடர் பிரசங்கம் நிகழ்த்திய பிரசங்கபூஷணம் ந. சிவசண்முகமூர்த்தி இந் நிகழ்வில் பாராட்டிக் கௌரவிக்கப்படுவார். பாராட்டுரைகளை ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம், கலாநிதி தா. அமிர்தலிங்கம், செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் ஆகியோர் நிகழ்த்துவர்.

தொடர்ந்து எஸ். ஆர். திருஞானசம்பந்தன் திருமுறை இசை விருந்து அளிப்பார். (க-7)

## மக்கள் வங்கி சுன்னாகம் கிளை கூடிய வைப்புத் தொகை திரட்டல்

### 40 ஆண்டுக் கொண்டாட்டத்தில் பாராட்டு

வலிகாமம் தெற்கு, செப். 3

கடந்த 2000 ஆம் ஆண்டு இலங்கை முழுவதிலும் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளால் ஆகக்கூடிய தொகையை வைப்புக்களாகத் திரட்டிய முதல் பத்துக் கிளைகளுள் வடக்கின் சுன்னாகம் மக்கள் வங்கிக்கிளையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மக்கள் வங்கியின் 40ஆவது ஆண்டுக் கொண்டாட்டங்கள் கொழும்பு தாஜ் சமுத்திர ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றபோது தெரிவு செய்யப்பட்ட பத்து வங்கிக் கிளை முகாமையாளர்களும் அழைக்கப்பட்டு, கௌரவிக்கப்பட்டதுடன், பரிசுகளும் பாராட்டுப் பத்திரங்களும் வழங்கப்பட்டன.

வடக்கின் ஒரே ஒரு வங்கியாகத் தெரிவு செய்யப்பட்ட சுன்னாகம் மக்கள் வங்கியின் முகாமையாளர் க. ஆனந்தராசா அங்கு கௌரவிக்கப்பட்டார். அவரின் வங்கிச் சேவையைப் பாராட்டி பாராட்டுப் பத்திரமும், 25 ஆயிரம் ரூபா பணப் பரிசும் வழங்கப்பட்டன.

இலங்கை மக்கள் வங்கி தலைவர் மனோ தித்தவெல தலைமையில் தாஜ் சமுத்திர ஹோட்டலில் நடைபெற்ற 40 ஆவது ஆண்டு கொண்டாட்டங்களில் மக்கள் வங்கி பொது முகாமையாளர் டெரக் ஹெலியும் கலந்து கொண்டார்.

கடந்த வருடத்தில் ஒவ்வொரு மாதமும் கூடிய வைப்புக்களைத் திரட்டிய 16 வங்கிக்கிளை முகாமையாளர்களும், மக்கள் வங்கி ஆரம்பித்த காலம் தொடக்கம் (40 வருடங்கள்) தொடர்ச்சியாக நடைமுறைக் கணக்குகளைப் பேணிவரும் வாடிக்கையாளர்களும் இவ்வைபத்தில் வைத்துக் கௌரவிக்கப்பட்டதுடன் பாராட்டுப் பத்திரங்களும், பணப் பரிசுகளும் வழங்கப்பட்டன. (க-152)

# புலிகள் அமைப்புக்கு எதிராக பிரான்ஸ் தடை விதிக்காது

## அந்நாட்டு வெளியுறவு அமைச்சு அதிகாரி அறிவிப்பு

கொழும்பு, செப். 3

விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்யும் எண்ணம் பிரான்ஸுக்கு இல்லை என்று அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

''இந்தோ ஏசியன்'' செய்திச் சேவைக்கு வழங்கிய விசேட பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் அரசு புலிகள் அமைப்பைத் தடை செய்தது போன்று பிரான்ஸும் புலிகளைத் தடைசெய்யமாட்டாது.

இலங்கையில் இடம்பெறும் வன்முறைகளை நாம் கண்டிக்கின்றோம். எனினும் எந்தஅமைப்புகளையும் தடைசெய்யும் நடைமுறை எதுவும் எம்மிடம் இல்லை.

பிரிட்டிஷ் அரசு புலிகளைத் தடைசெய்ததை அடுத்து, அங்கிருந்து தங்களது சர்வதேசத் தலைமைச் செயலகத்தை வன்னிக்கு மாற்றிய புலிகள், தற்போது தங்கள் செயற்பாடுகளை பிரான்ஸில் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் புலிகளுக்கு அலுவலகம் ஒன்றுள்ளது. தற்போது அங்கு புலிகளின் நடமாட்டமும் அதிகரித்துள்ளது. எனினும் பிரான்ஸில் புலிகளின் நடமாட்டம் அதிகரித்திருப்பது குறித்து நாங்கள் கவலைப்படவில்லை.

எங்கள் நாட்டுப் பொலீஸார் அனைத்து நடவடிக்கைகளையும் உன்னிப்பாகக் அவதானித்து வருகிறார்கள். இலங்கையில் இடம்பெறும் வன்முறைகளுக்கு இங்கிருந்து நிதியுதவி கிடைக்கிறதா என்பது குறித்தும் அவதானிக்கப்படுகிறது. எனினும் இங்கு இதுவரை எவரும் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் எவையும் கிடைக்கவில்லை.

பிரான்ஸில் தற்போது ஒரு லட்சம் இலங்கைத் தமிழர்கள் வரை வாழ்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் பாரிஸிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலுமே வாழ்கிறார்கள். இங்கு தமிழர்கள் பல்வேறு வர்த்தக, மத, கலாசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதுடன், பலர் செய்திப் பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும் பிரசுரித்து வருகின்றனர்.

— என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் — பிரான்ஸுக்குள் நுழைவதற்குப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் உட்பட புலிகளின் ஆறு முக்கியஸ்தர்களுக்கு விஸா வழங்க அந்நாடு மறுத்துள்ளதாக இலங்கை அரசு வெளியிட்ட தகவல்களை அந்நாடு முற்றாக நிராகரித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (க-7)

# தமிழில் பேசுவதை இழிவாகக் கருதும் சமூகம் தற்போது உருவாகி வருகிறது

## சஞ்சிகை வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், செப். 3

தமிழ்மொழியில் பேசுவதை நாகரிகக் குறைவாக — இழிவாகக் கருதும் சமூகம் ஒன்று எம்மத்தியில் உருவாகிவருகிறது. தமிழ் மொழியில் அளவளாவும் ஒருவர் இடையிடையே ஆங்கிலப் பதங்களைக் கலந்து பேசுவதை நாகரிகம் எனக்கருதும் தன்மையும் உருவாகிவருகிறது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஆசிரியர் கே. ரவீந்திரன்.

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் மாதாந்தம் வெளியிடப்படும் ''ஞானச்சுடர்'' சஞ்சிகையின் வெளியீட்டு விழா அண்மையில் பேரவை மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வெளியீட்டுரை நிகழ்த்திய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எஸ். நாகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய சமுதாயத்தில் சைவத்தையும் தமிழையும் பேணிக்காக்கும் நிலை அருகிவருவது வேதனையளிக்கிறது. பழம் பெருமை மிக்க இன்பத் தமிழைப் போற்ற வேண்டிய தமிழர்' தமிழ் மொழியில் பேசுவதை நாகரிகக் குறைவாகக் கருதும் இழி நிலை காண்கின்றோம்.

தமிழின் தொன்மையும், தனிச்சிறப்பும் உலகெலாம் பரந்து வியாபித்து கீர்த்தி பரப்பும் இவ்வேளை நம்மவர் இத்தகைய போக்கைக் கைவிட வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் சஞ்சிகைகள் பலவும் வர்த்தக நோக்கின் அடிப்படையிலேயே வெளியிடப்படுகின்றன. ஆனால் 'ஞானச்சுடர்" முற்றுமுழுதாக வர்த்தக நோக்கமின்றி ஆன்மீக நெறிப் பரப்பும் உயரிய குறிக்கோளுடன் வெளிவருகிறது. இது சைவமக்களுக்குப் பெருமை சேர்க்கும் கைங்கரியமாகும்—என்றார்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் எஸ். விநாயகமூர்த்தி மதிப்பீட்டுரை நிகழ்த்துகையில்:-

புலன்களை ஒருமுகப்படுத்தி இறைவன் பால் நேசம் கொண்டால் ஆன்ம சுகம் கிட்டும். இந்த வகையில் 'ஞானச்சுடர்' தரம் மிக்க பல ஆக்கங்களைத் தாங்கி இறைபணியாற்றி வருவது போற்றுதற்குரியது.

நேர்த்தியான வகையில் இவ்வாக்கங்கள் மலரில் செழுமை சேர்க்கும் வகையில் தொகுக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். அகஇருள் அகற்றி ஞானஒளி விரவிட இந்த விதத்தில் ஆற்றப்படும் பணியானது சைவர்களால் பெரிதும் மெச்சப்படுகின்றது. முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் முருகன் அருளாட்சி மேன்மையுறும் இப்பணிக்கு உறுதுணையாகின்றது — என்றார்.

தொண்டமனாறு வீரகத்தி மகா வித்தியாலய அதிபர் என். அரியரத்தினம் நன்றியுரை நிகழ்த்தினார். (க-7)

## கிணறுகளை இறைத்துத் துப்புரவுசெய்ய சாவகச்சேரி நகரசபைக்கு 5 நீரிறைக்கும் இயந்திரங்கள்

### பிரதேச செயலகம் வழங்கியது

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கிணறுகளை இறைத்துத் துப்புரவு செய்வதற்குத் தென்மராட்சிப் பிரதேசசெயலகத்தினால் ஐந்து நீரிறைக்கும் இயந்திரங்கள் நகரசபையிடம் கையளிக்கப்படவுள்ளது

கிணறுகளை இறைக்க விரும்புவோர் நகரசபையிடம் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் மக்கள் மீளக் குடியமரும் பகுதிகளில் உள்ள கிணறுகளை இறைப்பதற்கு வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபை 25 நீரிறைக்கும் இயந்திரங்களைப் பிரதேச செயலகத்திடம் கையளித்துள்ளதாகவும், இவை பிரதேசத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்கள், சுமநல சேவை நிலையங்கள் ஆகியவற்றின்மூலம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(க-117)

# பணத்திற்கு விலைபோகாத தலைவராக விளங்கியவர் அமரர் நித்தியானந்தா

## நினைவுதின நிகழ்வில் உரை

யாழ்ப்பாணம்,செப்.3

வெள்ளைக்கார ஆட்சியிலிருந்து ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சி வரை பல தலைவர்களையும் நிர்வாகிகளையும் கண்ட அமரர் கே.சி. நித்தியானந்தா பணத்திற்கு விலை போகாத பெருந் தலைவர்களில் ஒருவராக விளங்கியவர்.

அண்மையில் யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெற்ற, பனை அபிவிருத்திச் சபையின் ஸ்தாபகத் தலைவரான அமரர் கே.சி.நித்தியானந்தாவின் நினைவுதின நிகழ்வுக்குத் தலைமை வகித்த பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் மு.பாக்கியநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தமதுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

அமரர் கே.சி.நித்தியானந்தாவின் தன்னலம் கருதாத சேவைகள் என்றுமே நினைவு கூரப்படவேண்டியவை. தொழிற்சங்கத் தலைவராக, சமதர்மவாதியாக, சிந்தனையாளனாக, காந்தீயவாதியாக, தொழிலாளிகளின் தோழனாக, அகதி மக்களின் வழிகாட்டியாக வாழ்ந்த நித்தியானந்தா 12 வருடங்கள் தொடர்ச்சியாக பொது எழுதுவினைஞராக இந்த பெருமைக்குரியவர்.

1977 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆரம்ப கர்த்தாவாகத் திகழ்ந்த இவருடன் இணைந்து அக்காலங்களில் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தமையை எண்ணி நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

பனையை நம்பி வாழ்க்கை நடத்தும் ஏழைத் தொழிலாளர்களின் வறுமை நிலையைப் போக்க வேண்டும் என்பதற்காக 1978ஆம் ஆண்டு பனை அபிவிருத்திச் சபையை உருவாக்கியபோது அதன் ஆரம்பத் தலைவராக விளங்கியவர்.

இக்கால கட்டங்களில் அவர் நோயாளியாக இருந்தபோதிலும் அதனைப் பொருட்படுத்தாமல் பல அகதி முகாம்களை நடத்திவந்தார்.

அது மட்டுமன்றி தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினூடாக நெடுங்கேணியில் பல பண்ணைகளை உருவாக்கி, அதன் மூலம் இளைஞர்களை ஊக்குவித்து அவர்கள் மூலம் பல்லாயிரக்கணக்கான மக்களுக்குத் தொண்டாற்றி வந்தார்.

எமது அரசியல்வாதிகள் தூர நோக்குத் கொண்டிராத காரணத்தினால், அப்பகுதியில் அமரர் நித்தியானந்தாவின் சிந்தனையில் உருவாக்கப்பட்ட இக் குடியேற்றத் திட்டங்கள் இன்று பறிபோன மண்ணாக எம்முன் காட்சியளிக்கின்றன - என்றார்.

### அரச அதிபருரை

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன் தமதுரையில்:-

அமரர் கே.சி.நித்தியானந்தாவை முக்கியமான மூன்று வகையான பணிகளில் வைத்து மதிப்பிட முடியும். அவர் சிறந்த தொழிற்சங்க வாதியாக வாழ்ந்து, தொழிலாளர்களின் நலனுக்காக தன்னையே அர்ப்பணித்துப் பாடுபட்டவர். அத்துடன் பனை அபிவிருத்திச் சபையை ஸ்தாபித்து, அதன் தலைமைக் காரியாலயத்தை யாழ்ப்பாணத்திலேயே நிறுவவேண்டும் என்பதில் முழுமூச்சாக ஈடுபட்டவர்.

தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தை ஆரம்பித்து தமது இறுதிக்காலம்வரை அதனை நெறிப்படுத்திய பெருமைக்குரியவராக நித்தியானந்தா திகழ்கின்றார்.

இவ்வாறு பல வகையிலும் மக்களுக்குத் தொண்டு புரிந்த இவரை நினைவு கூர்ந்து உரை நிகழ்த்துவதில் மிகவும் பெருமையடைகின்றோம் - என்றார்.

இந்த நினைவு தின நிகழ்வில் எழுதுவினைஞர் சங்கச் செயலாளர் எஸ்.தவராஜா, பனை அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் கோ.சி. வேலாயுதம், ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.தவராஜா, வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் ஆலோசகர் செல்வி மகேஸ்வரி வேலாயுதம், விரிவாக்க உத்தியோகத்தர் வி.ஜி.தங்கவேலு ஆகியோரும் கலந்துகொண்டு நினைவு உரையாற்றினார்கள். (க-4)

# 'மழலைகள் கல்விப் பூங்கா' கந்தரோடையில் நிர்மாணம்

வலி.தெற்கு,செப்.3

கந்தரோடை கலைமதி சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கி வரும் முன்பள்ளி பாடசாலை மாணவர்களின் தேவையை முன்னிட்டு பிரம்மாண்டமானதொரு 'மழலைகள் கல்விப்பூங்கா' நிர்மாணிக் கப்பட்டு வருகின்றது.

இந்தப் பூங்காவை அமைப்பதற்கு 75ஆயிரம் ரூபாவையும், அதன் தளபாட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு 40 ஆயிரம் ரூபாவையும் வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கியிருந்தார்.

கலைமதி சனசமூக நிலைய நிர்வாகிகள் மற்றும் கிராம முக்கியஸ்தர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை வலிகாமம் தெற்கு பிரதேச சபைத் தலைவர் க.கமலசேகரன் (பாபு) ஊடாகச் சந்தித்து கலந்துரையாடினர். இதன்போது மேற்படி நிதியை உடனடியாக வழங்குவதற்கு அமைச்சர் சம்மதம் தெரிவித்திருந்தார்.

அத்துடன் கலைமதி சனசமூக நிலைய கட்டட புனரமைப்புக்கு 75 'பைக்கெற்' சிமெந்து வழங்குவதாகவும் அமைச்சர் உறுதியளித்தார்.

இச்சந்திப்பின்போது உடுவில் வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் புனரமைப்புப் பணிகளுக்காக ஐந்து லட்சம் ரூபாவையும் அமைச்சர் டக்ளஸ் ஒதுக்கீடு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (க-152)


## அவசர கலந்துரையாடல்

இராமநாதன் நுண்கலைத்துறையின் 3ஆம் வருட மாணவர்களுக்கான கலந்துரையாடல் இன்று (03.09.2001) காலை10.30 மணிக்கு அறிமுறைமண்டபத்தில் நடைபெற இருப்பதால் அனைவரையும் தவறாது சமுகம்தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நுண்கலைத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம். 3ஆம் வருடப் பிரதிநிதி.

(91823)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 1913 - 06 - 04



இறைவன் அடியில் 2001 - 08 - 02

### அமரர் சிற்றம்பலம் வைரமுத்து

*(தையிட்டிப்புலம் - தெல்லிப்பழை)*

அன்பாய் அரவணைத்து ஆதரவாய்க் கண்டித்து
அடக்கமாய் எம்மை வளர்த்த - எம்
ஆருயிர்த் தெய்வமே!
ஒரு தந்தையின் அத்தனை கடமைகளையும்
சற்றேனும் தவறாமல் நிறைவேற்றி,
சமுதாயத்தில் எமைத் தலைநிமிர்ந்து - வாழ
வைத்து நிறைவான மனதுடன் இறைபதம்
அடைந்து விட்டீர்கள்!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் சகல விதத்திலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எங்கள் நன்றியறிதலைத் தெரிவிக்கின்றோம். எமது இல்லத்தில் இன்று (03.09.2001) திங்கட்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ப.நோ.கூ.சங்க ஒழுங்கை,*
*சிறுப்பிட்டி மத்தி,*
*நீர்வேலி.*

- பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(91854)


### மல்லாகத்தில் இரு கிணறுகள் மக்கள் பாவனைக்கு

வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவில் இவ்வாரத்தில் இரு குடிதண்ணீர்க் கிணறுகள் பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் உதவியின் கீழ் புனரமைக்கப்பட்டு மக்களின் பாவனைக்குத் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மல்லாகம் வடக்கு, மல்லாகம் மத்தி ஆகிய இடங்களில் இவை திறந்துவைக்கப்பட்டன. (க-27)

### மீனவர்கள் முறைப்பாடு

வலி வடக்கு,செப்.3

பண்டத்தரிப்பு கடற்பகுதியில் சட்டவிரோதமான முறையில் ஆமை பிடித்த குற்றத்திற்காகத் தொடர்ந்து கடற்றொழிலுக்குச் செல்ல கடற்படையினர் தடைவிதித்துள்ளதாக சுழிபுரத்தைச் சேர்ந்த ஆறு கடற்றொழிலாளர்கள் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர். இவர்களின் முறைப்பாட்டைக் கவனத்திற்கு எடுத்துக் கொண்ட மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி பா.சுப்பிரமணியம் ஏற்கனவே குறிப்பிட்ட ஆறு நபர்களும் கடலில் சட்டவிரோதமான முறையில் ஆமை பிடித்த குற்றத்திற்காக நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டுள்ளனர் என்றும் -

அதனால் இவர்களின் ஜீவனோபாயத்திற்கு வேண்டிய தொழில் முயற்சியைத் தடைசெய்யக் கூடாது என்றும் பண்டத்தரிப்பு கடற்படைக் கட்டளைத் தளபதிக்கு அறிவுறுத்தல் அனுப்பியுள்ளார்.

இந்த 6 கடற்றொழிலாளர்களும் கடந்த ஒருமாத காலமாக தொழிலுக்குச் செல்லாதிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-86)

## லயன்ஸ் [illegible]ங்களின் நிகழ்வுகள்



சுன்னாகம் கிழக்கு சிறுவர் முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா அண்மையில் சுன்னாகத்தில் நடைபெற்றசமயம் சிறார்களுக்கு சுன்னாகம் லயன்ஸ் கழகம் பற்பசை மற்றும் பற்தூரிகைகளை இலவசமாக வழங்கியது. அவற்றை உடுவில் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் வழங்குவதையும், சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் வி.யோகேஸ்வரன் உட்பட லயன்ஸ் கழகத்தின் ஏனைய உறுப்பினர்கள் சிலர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.




வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் 25ஆவது வருட பட்டயதின விழாவும் புதிய நிர்வாக சபையின் பதவியேற்பு வைபவமும் அண்மையில் நடைபெற்றன. இந்நிகழ்வில் புதிய தலைவரான டாக்டர் சி.சதாசிவம் அராலி மேற்கு வள்ளியம்மை வித்தியாசாலை மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் அடங்கிய பொதியை அதிபர் எஸ்.புண்ணியமூர்த்தியிடம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

இவ்வைபவத்தின் பிரதம அதிதியான பிராந்தியத் தலைவர் லயன்.செ.ஞானராஜா மத்தியில் காணப்படுகின்றார்.

*(படம்:- சண்டிலிப்பாய்ச் செய்தியாளர்)*




வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் 2001/2002ஆம் ஆண்டுக்குரிய பதவி அமர்வு வைபவத்தின் போது புதிதாக இணைந்து கொண்ட லயன் வி.ஆர்.கனகராஜாவை அங்கத்தவராக்கும் வைபவம் அண்மையில் இடம்பெற்றது. பிராந்திய அமைப்பாளர் லயன் எஸ்.பத்மநாதன் அங்கத்துவப் பத்திரத்தைக் கையேற்பதைப் படத்தில் காணலாம். அருகில் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் புதிய தலைவர் லயன் Dr.சதாசிவம் காணப்படுகின்றார். (க)

## சமூக சேவைத் திணைக்களத்தால்

# முதியவர்களுக்கு விருது வழங்க தேர்வு நடவடிக்கை ஆரம்பம்

வலி.வடக்கு,செப்.3

முதியவர்களுக்கு விருது வழங்குவதற்கு வேண்டிய முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை சமூக சேவைத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

90 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களே விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். இத்தகைய முதியவர்கள் பற்றிய விவரங்களை பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக உள்ள கிராம அலுவலர்கள், சமூக சேவை உத்தியோகத்தர்கள் தேர்வு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இத்தகைய தகுதியுடையவர்களின் பெயர், முன்னைய தொழில், அவர்கள் சமூக மட்டத்தில் ஆற்றிய சேவைகள், கல்வித்தகைமை போன்ற விவரங்களையும் அனுப்பி வைக்கும்படியும் கோரப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள வயோதிபர் தின விழாவில் இவர்களுக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளன. (க-86)

### விதை நெல் விநியோகம்

வடமராட்சி கிழக்கு,செப்.3

வடமராட்சி விவசாயிகளுக்கு காலபோகத்திற்கான விதை நெல்லை புலோலி கமநல சேவை நிலையம் வழங்கி வருகின்றது.

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் தருவிக்கப்பட்ட விதை நெல் புசல் 620ரூபா வீதம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. (க-182)

# இடைக்கால ஆட்சி புலிகளுக்கு; தமிழ்க் குழுக்களின் நிலை என்ன?

## கருத்தறிய இந்தியா முயல்வதாகத் தகவல்

கொழும்பு,செப்.3

ஸ்ரீலங்கா தொடர்பான போக்கை அண்மைக்காலத்தில் மாற்றிக் கொண்டுள்ள இந்தியா, வடக்கு - கிழக்கின் இடைக்கால ஆட்சியை விடுதலைப் புலிகளிடம் வழங்க வேண்டிவந்தால் அது குறித்து ஏனைய தமிழ்க் குழுக்களின் நிலை என்ன என்பதை அறிந்து கொள்வதில் தற்போது ஈடுபட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஸ்ரீலங்காவுக்கான இந்தியத் தூதர் பதவியில் அண்மையில் செய்யப்பட்ட மாற்றம், ஸ்ரீலங்கா விடயத்தில் இந்தியா தனது கூடிய பங்களிப்புக்கு ஆயத்தமாகின்றது என்பதையே காட்டுகிறது.

சில கொழும்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஆங்கில வார ஏடு ஒன்று இத்தகவல்களை வெளியிட்டிருக்கிறது.

இதேவேளை -

ஸ்ரீலங்கா நிலைவரம் தொடர்பான முக்கிய கருத்தரங்கு ஒன்று புதுடில்லியில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியுள்ளது.

இந்திய சர்வதேச நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள இந்தக் கருத்தரங்கில் இந்திய - இலங்கை உறவுகள் பற்றி ஆராயப்பட்டு வருகிறது.

இந்தியாவில் உள்ள புத்திஜீவிகள், முக்கிய விவகாரங்களைக் கையாளும் நிபுணர்கள், போராளிக் குழுக்களின் முன்னாள் பிரமுகர்கள், ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஓய்வுபெற்ற தளபதிகள் உட்படப் பலர் கருத்தரங்கில் உரையாற்றுகின்றனர்.

இந்திய அமைதிப் படையின் மட்டக்களப்புப் பிராந்தியத் தளபதியாகப் பணிபுரிந்த மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா இந்தக் கருத்தரங்கினை ஏற்பாடு செய்துள்ளார்.

ஸ்ரீலங்கா தொடர்பான இந்தியாவின் எதிர்காலப் பங்களிப்புக் குறித்து ஆலோசிக்கும் உத்தியோகபூர்வமற்ற கருத்தரங்காக இது அமைகின்றது என்று சில செய்தி வட்டாரங்கள் குறிப்பிட்டிக்கின்றன. (ஐ)

## பக்திபூர்வமாக நடந்த சந்நிதி தீர்த்தோற்சவம்

### பக்தர்கள் திரண்டு வந்து வழிபாடு

யாழ்ப்பாணம்,செப்.3

சரித்திர பிரசித்தி பெற்ற தொண்டமனாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்த உற்சவம் நேற்று மிகவும் பக்திபூர்வமாக இடம்பெற்ற தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவுபெறறது.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து வந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் நேற்று ஆலயப் பகுதியில் திரண்டிருந்தனர்.

காலை 7.30 மணியளவில் சந்நிதி வேலன் பல்லக்கில் பக்திபூர்வமாக தீர்த்தக் கேணிக்கு ஆரோகணித்தார். பக்தர்களின் 'அரோகரா' கோஷம் வானைப்பிளக்க தீர்த்த உற்சவம் இடம்பெற்றது.

தீர்த்த உற்சவத்தை ஒட்டி தூக்குக்காவடிகள், பாற்காவடிகள், கற்பூரச்சட்டிகள், பறவைக்காவடிகள், கிரகக்காவடிகள் எனப் பல காவடிகள் நேற்று பக்தர்களால் எடுத்து வரப்பட்டன.

ஆலய வீதியில் பக்தர்களின் அங்கப் பிரதிட்சை, பெண்களினால் நிறைவேற்றப்படும் அடி அழித்தல் என்பனவும் இடம்பெற்றன.

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையபிரிவினர், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள், பாடசாலை மாணவர்களின் சாரணத் தொண்டர்கள் எனப் பல தொண்டர் சேவை நிறுவனங்கள் ஒழுங்கு நடவடிக்கைகளைப் பேணும் பணியில் ஈடுபட்டன.

இதேவேளை -

ஆலயச் சூழலில் பொலீஸ் சேவை, பருத்தித்துறை பிரதேச செயலகம், சுகாதார சேவைகள் போன்ற அரச திணைக்கள அலுவலகங்களும் செயற்பட்டன.

ஆலயத்தைச் சூழவுள்ள மடங்களில் அன்னதானம் மிகத் தாராளமாக பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

ஆலயச் சூழலில் குடி தண்ணீர் வசதி பருத்தித்துறை நகர சபையினால் வழங்கப்பட்டது. (ஐ-31)


காரைநகர் மணற்காடு அருள்மிகுதேவி
கும்பநாயகி முத்துமாரி அம்பாள் கோயில்
புதிய சித்திரத் தேருக்கான
கால்கோள் (நாள் வேலை ஆரம்ப) விழா

அன்பிகை அடியார்களே!

நிகழும் விஷு வருடம் ஆவணி மாதம் 20ஆம் நாள் (05.09.2001) புதன்கிழமை காலை 6 மணி தொடக்கம் 8 மணி 43 வரையுள்ள கன்னிலக்கின சுப முகூர்த்தத்தில் நாள் வேலை ஆரம்பமாகும்.

நிகழ்ச்சிகள் அதிகாலை 5 மணிக்கு அம்பாள் ஸ்நபந அபிஷேகம், விநாயகர், வைரவர் ருத்ரா அபிஷேகம் காலை 6.00 மணிக்கு - திருவனந்தல் பூசையைத் தொடர்ந்து கால்கோள் விழா நடைபெறும்.

ஸ்தபதி :- அராலியூர் விஸ்வப் பிரம்மஸ்ரீ சீ.அமரசிங்கம் ஆசாரியாரும் குழுவினரும்

குருமார் விவரம் :-

சிவஸ்ரீ நா.ஞானசம்பந்தக் குருக்கள் - காரைநகர்
சிவஸ்ரீ சோ.கௌரீஸ்வரக் குருக்கள் - நவாலி
சிவஸ்ரீ சிவ.சிவமூர்த்திக் குருக்கள் - கட்டுடை

பல லட்சம் ரூபா செலவில் அமையும் சித்திரத் தேர்த் திருப்பணிக்கும் அதற்கான தேர் முட்டித் திருப்பணிக்கும் இலங்கை வங்கி காரைநகர் கிளை நடைமுறைக் கணக்கு இல.103 இல் நிதியை வைப்பிலிடும் வண்ணம் பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

மணற்காடு, காரைநகர். - தேர்த் திருப்பணிச் சபையினர்
தொலைபேசி இல.- 3659
(91826)



டாக்டர் திருமதி கமலலோஜனி பரமசிவம்
D.A.M.S. (Hons)
சமாதான நீதிவானாக நியமனம் பெற்றதைப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்



27.08.2001 இல் சமாதான நீதிவானாக
யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான்
திருமதி எஸ்.இளங்கோவன்
அவர்கள் முன்னிலையில்
சட்டத்தரணிகள் க.கேசவன், பா.தவபாலன்
ஆகியோர் உடனிருக்க சத்தியப்பிரமாணம் செய்தார்.

❖ 1977 ஆம் ஆண்டு லங்கா ஆயுர்வேத மருத்துவக்கல்லூரியில் விரிவுரையாளராகக் கடமை ஏற்றவர்.

❖ 1998 ஆம் ஆண்டில் அக்கல்லூரியின் அதிபராக நியமிக்கப்பட்டார்.

அவரைப்பாராட்டிக் கௌரவிப்பதோடு அவரது சேவை மேன்மையுற வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

இல.4, செட்டித்தெரு, நல்லூர். (C/18112) திரு.திருமதி பொ.சுப்பிரமணியம் குடும்பத்தினர்.


## அடுப்பில் கொதிக்கும் கறியினுள் வீழ்ந்தவர் படுகாயம்

தொண்டமானாறு 'செல்வச் சந்நிதி முருகன் ஆலய தீர்த்தோற்சவ திருவிழாவான நேற்று ஆலயப் பகுதியில் அன்னதான மடத்தில் அடுப்பில் கொதித்துக் கொண்டிருந்த கறிக் கடாரத்தினுள் தவறிவீழ்ந்த ஒருவர் பலத்த எரிகாயங்களுக்கு இலக்கானார். சின்னத்துரை சுப்பிரமணியம் என்பவரே கறிக் கடாரத்தினுள் தவறி வீழ்ந்து காயமடைந்தார்.

இவர் மந்திகை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டார். (ஐ-173-117-31)


நாகம்ஸ் சுன்னாகம்
மாதவன், ஜோதிகா, விவேக் நடிக்த
டும் டும் டும்
(ரீல்ஸ்)
காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)
(91824)

ராஜா யாழ்ப்பாணம்
இன்று முதல் குதூகல ஆரம்பம்
அஜித், ஜோதிகா
நடிப்பில
முகவரி
தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2, 5 (புதிய நேரம்)
(C/18074)


## அகதிமுகாம்களில் சுகாதாரம் பேண நடவடிக்கை

வடமராட்சி கிழக்கு,செப்.3

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் உள்ள இடம்பெயர்ந்த மக்களின் முகாம்களில் சுகாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக ஆரம்ப சுகாதார கவனிப்பு உத்தியோகத்தர்கள் ஒருவரும் 10 சுகாதாரத் தொண்டர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளை, யூ.என்.எச்.சி. ஆர். நிறுவனத்தின் அனுசரணையுடன் இவர்களை நியமித்துள்ளது.

இவர்களுக்கான இருநாள் பயிற்சி வகுப்புக்கள் ஏற்கனவே நடத்தப்பட்டுள்ளன. (க-182)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்னம்மா சவரிமுத்து

சில்லாலையைப் பிறப்பிடமாகவும்,வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா சவரிமுத்து நேற்று (02-09-2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சவரிமுத்துவின் அன்பு மனைவியும், பிறேமளா, மஞ்சுளா (விவசாயத் திணைக்களம், யாழ்ப்பாணம்), புவேந்திரராஜா, மகேந்திரராஜா, சஜீந்திரராஜா (ஜெயா அச்சகம், சாவகச்சேரி), ரவீந்திரராஜா, நிர்மலா, அனுலா ஆகியோரின் அன்புத் தாயாரும், வீற்றா, வதனி, ஜயந்தி, யோகராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், டயாணா, யுவானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03-09-2001) திங்கட்கிழமை பிற்பகல் 3.30 (புதிய நேரம்) மணியளவில் அவரது இல்லத்திலிருந்து கதிரைமாதா ஆலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு ஆன்ம சாந்திப்பலி நிறைவேற்றப்பட்டு பின்பு கதிரைமாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*நீலகண்டர் வளவு,*
*சில்லாலை.*
(91856)
தகவல்:
சு. சவரிமுத்து
(கணவன்)

### செல்லையா குலசிங்கம்

(ஆங்கில ஆசிரியர் - வீரணங்கல், வதிரி, கரவெட்டி)

வதிரியைப்பிறப்பிடமாகவும்,வதிவிடமாவும் கொண்ட செல்லையா குலசிங்கம் (ஆங்கில ஆசிரியர்) 2001.09.01 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும்,கலைமதி தவச்செல்வி (டென்மார்க்), சந்திரிகா (பிரான்ஸ்), சந்திரதேவன் (கடற்றொழில் திணைக்களம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வம், கரீஸ் (டென்மார்க்), ஞானசேகர் (பிரான்ஸ்), தயாளினி ஆகியோரின் மாமனும், நிசான், நிவேதன், அலெக்சன் ஆகியோரின் பாசமிகு பேரனும், ராசாத்தி (கனடா), Dr.சொர்ணலிங்கம் (பண்டாரவளை), இராஜசிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2001.09.03) திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு (புதியநேரம்) கிரீப்பல்லி சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வீரணங்கல்,*
*வதிரி,*
*கரவெட்டி.*
(C/18111)
தகவல்:
கு.சந்திரதேவன்
(மகன்)

### கந்தையா செல்வரத்தினம்

காட்டுக்கந்தோர் ஒழுங்கையைச் சேர்ந்த இரத்தினம் என்று அழைக்கப்படும் பிரபல வர்த்தகர் கந்தையா செல்வரத்தினம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை சின்னமுத்துவின் மருமகனும், கமலாம்பிகை, ஆனந்தரஞ்சிதமலர், ஜெயரராணி, மகேந்திரன், சிவசோதி, உமாபதி, கலாவதி ஆகியோரின் தந்தையும் குகநேயன், குகதாஸ், நவரத்தினராசா, கலாமாலினி, பரமேஸ்வரன், வாமபாகன், அனுரா ஆகியோரின் மாமனாரும், நல்லம்மா காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், தியாகராஜா மற்றும் சண்முகலிங்கம், நகுலேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை, சந்தானலட்சுமி, சிவமணி, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2001) திங்கட்கிழமை 35, காட்டுக்கந்தோர் ஒழுங்கையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் மாலை புதிய நேரம் 4.00 மணிக்கு தகனக் கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*35, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,*
*சுண்டுக்குளி.*
(91858)
தகவல்:-
சகோதரர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### திருமதி நடராசா சரஸ்வதி

(ஓய்வுபெற்ற ஆசிரியை, மருதங்கேணி இ.த.க. பாடசாலை)

மருதங்கேணியைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை தற்காலிக வதிவிடமாகவும்கொண்ட திருமதி நடராசா சரஸ்வதி நேற்று (2.9.2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் (ஆசிரியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சத்தியதேவி, ஜெயமோனன் (நோர்வே), ஜெயதரன் (சுவிஸ்), சத்தியகலா (டென்மார்க்), ஜெயகீதன் (கொழும்பு), சத்தியரதி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*நாகலிங்க முதலியார் வீதி,*
*பருத்தித்துறை.*
(91859)
தகவல்:
மகள்

### தம்பையா சிவசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பையா சிவசுப்பிரமணியம் நேற்று (02.09.2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - செல்லம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் கெங்காதேவியின் அன்புக் கணவரும் சுகந்தனின் (இலங்கை வங்கி, யாழ்.மேற்நரக்கிளை) அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற மகேஸ்வரி, யோகேஸ்வரி, தனபாலசிங்கம், சற்குணசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.09.2001) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் ஏழாலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*ஏழாலை மேற்கு,*
*ஏழாலை.*
(91861)
தகவல்:
சுகந்தன்
(இலங்கை வங்கி, யாழ்.மேற்நரக்கிளை)

# நாட்டுக்காக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதி வேண்டுகோள்விடுத்தார்.

பெண்கள் உட்பட பெரும்பாலான வர்கள் அதற்கு 'ஆம்' என்று பதில் அளித்தனர்.

யுத்தத்தில் இணைய சகலரும் தயார் என தெரிவித்தாலும் கூட இணைகப்பாடு ஒன்றின அடிப்படையில் இனப் பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வு காணப்படவேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அங்கு ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:-

மக்களின் தேவைகளை நிறைவேற்றவல்ல அரசமைப்புக்குத் தடைகற்களாக உள்ளவற்றை உடைத்தெறிய வேண்டும். நாம் தொடர்ந்தும் குறைபட்டுக்கொண்டிருக்க முடியாது. இதைச் செய்ய முடியாது; அதைச் செய்ய முடியாது என்ற பேச்சை நிறுத்தி மக்களின் தேவைகளுக்கு முன்னுரிமை கொடுத்து ஜனநாயக முறையில் புரட்சி செய்து அரசமைப்பை மட்டுமன்றி ஏனைய எல்லாவற்றையும் மாற்றி அடுத்த வருடத்துக்குள் முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

இனிமேலும் காரணங்களைக் கூறி நாம் பின்னிற்க முடியாது - என்றார். (ஐ-3)

# நாடாளுமன்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஏற்று, அதன் ஆதரவுடன் ஆட்சியில் தொடர நாடாளுமன்றக் குழு ஜனாதிபதிக்கு அங்கீகாரம் வழங்கியதாகத் தெரியவந்தது.

அதனையடுத்தே அரசு தனது இந்த முடிவுகளை அறிவித்திருக்கிறது.

ஜே.வி.பியின் நிபந்தனைகளை ஏற்று எதிர்வரும் 6 ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கூட்ட ஜனாதிபதி முடிவு செய்துள்ளார். அத்துடன் புதிய அரசமைப்புக்கு மக்களின் ஆணையைப் பெறுவதற்காக அடுத்த மாதம் நடைபெறவிருந்த சர்வஜன வாக்கெடுப்பையும் ஜனாதிபதி ரத்துச் செய்திருக்கிறார்.

ஜனாதிபதியின் இந்தத் தீர்மானங்கள் தொடர்பான உத்தியோக பூர்வ அறிவிப்பு நேற்று நள்ளிரவு வர்த்தமானி மூலம் வெளியிடப்பட இருந்தது.

எமது நிபந்தனைகளை ஏற்று அவற்றை நிறைவேற்ற அரசு இணங்கியுள்ளது. அவற்றில் சர்வஜன வாக்கெடுப்பை ரத்துச் செய்தல் மற்றும் நாடாளுமன்றத்தைக் கூட்டுதல் தொடர்பான முடிவை அரசு நேற்று நள்ளிரவு வர்த்தமானி மூலம் வெளியிட இருந்ததாக உத்தியோக பூர்வமற்ற விதத்தில் எமக்குத் தகவல் கிடைத்துள்ளது - என்று ஜே.வி.பியின் முக்கிய பிரமுகர் ஒருவர் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

அமைச்சர்களின் எண்ணிக்கையை 20 ஆகக் குறைக்கவும் -

ஐந்து துறைகள் சார்பான விவகாரங்களைக் கையாள தனியான ஆணைக் குழுக்களை நியமிக்கவும்-

அரசு இணங்கியுள்ளதாகவும் -

அவை தொடர்பான அறிவிப்புகள் இரண்டொரு தினங்களில் வெளியாகும் என எதிர்பார்ப்பதாகவும் - அவர் தெரிவித்தார். (ஐ-3)

## கால அட்டவணை

தகுதிகாண் அரசுக்கு ஆதரவு வழங்க ஜே.வி.பி. விடுத்திருக்கும் நிபந்தனைகளை ஏற்க அரசு சம்மதித்திருப்பதை அடுத்து அந்த நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கான கால அட்டவணை ஒன்று தயாரிக்கப்படவுள்ளது. பொ.ஐ.மு. - ஜே.வி.பி. நடத்திய பேச்சுக்களில் காணப்பட்ட இணக்கம் தொடர்பாக இரு தரப்பும் இவ்வாரம் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## மரண அறிவித்தல்

### இராமசாமி செல்வரத்தினம்

**(செல்வரத்தினம் மாஸ்ரர்)**

(முன்னாள் தலைவர் - பண்டத்தரிப்பு பட்டின சபை,
முன்னாள் உரிமையாளர் - பண்டத்தரிப்பு எரிபொருள் நிரப்பு நிலையம்,
இளைப்பாறிய ஆசிரியர், சமாதான நீதிவான்)

இந்துக்கல்லூரி வீதி, வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமசாமி செல்வரத்தினம் நேற்று (02.09.2001) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு கனகசபை தம்பதிகளின் மருமகனும் மாலினி (பிரான்ஸ்), பாலச்சந்திரன் (பிரான்ஸ்), நந்தினி (வலி.மேற்கு பிரதேச சபை - தட்டெழுத்தாளர்), தேவராஜன் (ஜேர்மனி), குமரன் (பிரான்ஸ்), வசந்தினி (லண்டன்), கணேஷன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பொன்.கனகரத்தினத்தின் மாமனாரும் உதயகுமார், உதயசங்கர் (யாழ்ப்பாணக்கல்லூரி, வட்டுக்கோட்டை) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2001) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இந்துக்கல்லூரி வீதி,*
*வடலியடைப்பு,*
*பண்டத்தரிப்பு.*

தகவல்:
கனகரத்தினம் நந்தினி
(மகள்)

(C/18113)

## பருத்தித்துறையில்

# கைதான 42 மீனவர்களையும் எம்.பிக்கள் சென்று பார்த்தனர்

யாழ்ப்பாணம்,செப்.3

காங்கேசன்துறைத் தடுப்புமுகாமில் வைக்கப்பட்டிருந்த வடமராட்சியைச் சேர்ந்த 42 மீனவர்களையும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான தி.மகேஸ்வரனும், எஸ். சிவமகாராசாவும் நேற்றுக் காலை நேரில் சென்று பார்வையிட்டனர்.

முகாமுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் பெரேராவுடன் அவர்கள் கலந்துரையாடி மீனவர்களின் நிலை குறித்துக் கேட்டறிந்தனர்.

தடுத்து வைக்கப்பட்ட மீனவர்களில் 26 பேரை நேற்றே விடுதலை செய்வதாகவும் -

ஏனையோரை இன்று விடுதலை செய்வதாகவும் -

பொலீஸ் அதிகாரி தமக்கு உறுதியளித்ததாகவும் மகேஸ்வரன் (எம்.பி.) தெரிவித்தார்.

கைதானோரின் வாக்குமூலங்கள் பெறப்பட்டு வருகின்றன என்றும் -

இவர்களில் மூவருக்கு எதிராக வழக்குத் தொடர வேண்டிவரலாம் என்றும் -

பொலீஸ தரப்பால் தெரிவிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு உணவுப் பொருள்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வழங்கினர்.

அதைத் தொடர்ந்து பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் நேற்றுப் படையினரால் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த மீனவர்களுக்கான கூட்டத்திலும் இந்த இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தாங்கள் நடத்திய கலந்துரையாடல் தொடர்பான விவரங்களை அவர்கள் அப்போது மீனவர்களிடம் தெரிவித்தனர். (ஐ-3)

## பருத்தித்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அங்கிருந்து பொலீஸாரால் அழைத்துவரப்பட்டு பருத்தித்துறை நீதிவான் அ.பிரேம்சங்கர் முன்னிலையில் அவரது இல்லத்தில் ஆஜர் செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர். ஏனையோர் தொடர்ந்தும் காங்கேசன்துறை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

விடுவிக்கப்பட்ட 26 பேரையும் அழைத்துச் செல்வதற்காக அவர்களது உறவினர்கள் நேற்று மாலை நீதிவானின் இல்லத்துக்கு வெளியே கூடியிருந்தனர்.

தடுத்துவைக்கப்பட்டிருக்கும் ஏனைய மீனவர்களை விடுவிப்பது தொடர்பாக பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டுள்ளார்.

இதேவேளை -

கட்டுமரத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் உடல் சிதறிப் பலியானவர் யார் என்று இன்னமும் அடையாளம் காணப்படவில்லை.

விடுதலைப் புலிகள் இயக்க தற்கொலையாளி ஒருவரே படகில் குண்டை எடுத்துவந்து வெடிக்க வைத்துத் தற்கொலை புரிந்து கொண்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்திருக்கிறது. (ஐ-173-117-31)


G.C.E. A/L
விற்பனையாகின்றது
2001 A/L
பொதுச் சாதாரணப் பரீட்சை வழிகாட்டி நூல்
சொற்ப பிரதிகளுடன் சகல புத்தகசாலைகளிலும்


★ பரீட்சார்த்திகளுக்கான முற்றிலும் எதிர்பார்க்கை.
★ 5 மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன்.
★ 2001 AUG. வரையான பொது அறிவு விடயங்களும்.
திருத்திய 4ஆம் பதிப்பு
ஆக்கியோர்
P.உமாசங்கர் &
P.கமலதாசன்.
(91860)

To become a computer professional.........join at IIS

# Computer Courses

New Batches Start on : 09/09/2001 Sunday at 10.00 am

| பாடநெறி | காலம் (மாதங்கள்) | வழமையான கட்டணம் | சலுகைக் கட்டணம் |
|---|---|---|---|
| Diploma in MS Office | 5 | 8,000/= | 1,000/= |
| Diploma in Internet Technology | 4 | 6,000/= | 1,500/= |
| Diploma in Java Programming | 5 | 4,000/= | 2,000/= |
| Diploma in Visual Basic Programming | 5 | 3,500/= | 500/= |
| Diploma in Engineering Drawing and AutoCAD | 5 | 3,500/= | 1,000/= |
| Diploma in Computer Programming | 8 | 10,000/= | 2,500/= |
| Technician Diploma in Computer Hardware | 6 | 7,000/= | 1,500/= |
| Advanced Diploma in Applied Computer Science | 12 | 25,000/= | 10,000/= |



* புலமைப்பரிசில் போட்டிப் பரீட்சைகளில் தோற்றாமலேயே நம்ப முடியாத கட்டணச் சலுகையில் நவீன கணனி, தகவல் தொழில்நுட்ப பயிற்சியினைப் பெற்றுக் கொள்ள IIS நிறுவனம் வாய்ப்பளிக்கின்றது.

* A/L (2002 , 2003 ஏப்ரல்) மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை எவ்விதத்திலும் பாதிக்காத நன்கு திட்டமிடப்பட்ட பிரிவுகள் இவை.

* இச்சலுகைக் கட்டணம் இப்பிரிவுக்கு மட்டுமே வழங்கப்படும்.

இவ்வரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்!!

I I S

# Institute of Informatics Studies

Head Office :
100, Clock Tower Road, Jaffna. ☎ 021-2831 Email : iis@sltnet.lk
Branches: Nelliyady Karaveddy. Main Street, Chankanai.

SUBRA(14)
சித்தன்கேணி
ENGLISH
SPOKEN AND GRAMMAR
By:-BRITTO
(C/18085)
புதிய பிரிவு 05-09-2001
புதன் காலை 7.00 மணி

A/L எடுத்தவர்களுக்கான
புதிய ஆங்கில வகுப்புகள்
ஆரம்பம்:- 07.09.2001
OXFORD ENGLISH ACADEMY
By:- Mr.B.JOTHY
☆நெல்லியடியில்:- 8a.m.
அனுமதியை
MATHS CENTRE
இல் பெற்றுக்கொள்ளவும்.
☆பருத்தித்துறையில்:- 10 a.m.
பத்திரகாளி கோயில் வீதி
பஸ் நிலையம் அருகில்.
(அனுமதிப்பத்திரங்களை
முன்கூட்டியே அலுவலகத்தில் பெறவும்.)
(91447)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.09.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.